Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 21 இதழ் - 9 செப்டம்பர் 2008




**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

✆ 04257 - 230030, Cell : 98427 - 30382, 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை ............ 1
2. இயேசு கிறிஸ்து மீண்டும் எப்போது வருவார் ? ............ 10
3. பெண்கள் பகுதி ............ 13
4. வாலிபர் பகுதி ............ 17
5. சிறுவர் பகுதி ............ 20
6. மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே ............ 22
7. 5 நிமிட வேத வகுப்பு ............ 26
8. தேவனை எது அழச் செய்கிறது ? ............ 27
9. விசுவாசத்தின் அடிப்படைகள் ............ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 21 SEPTEMBER - 2008 Issue - 9**


ஆசிரியர் உரை

## "கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது"

"பாவிகளை இரட்சிக்கும்படியாய் இப்பாழுலகம் வந்து சென்ற இயேசு ஆண்டவரால் பிரத்யேகமாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர் அப்போஸ்தலன் பவுலடியார் என்பது நாமறிந்ததே. இவர், சவுலாக இருந்த போது, கிறிஸ்தவத்திற்கு எதிராகப் போட்ட ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்ல. (அப் 9:1-2). ஆம், பரிசேய பிரிவில் பிடிப்புள்ளவராக இருந்து, "மதம்" பிடித்த யானை போல் அலைந்து, கிறிஸ்தவத்தின் அடிச்சுவடு அடியோடு மறைய வேண்டுமென்று கங்கணம் கட்டி, பட்டணம் விட்டு பட்டணம் பறந்து கொண்டிருந்த ஓர் உச்சகட்ட வேளையில், இரட்சகரால் இவன் சந்திக்கப்பட்டு அழைக்கப்பட்ட விதமும், கொடுமைக்காரனாக இருந்த சவுல் அந்த அழைப்பை மனமார ஏற்றுக் கொண்ட பாங்கும், அந்த அழைப்பின் நோக்கத் தைப் புரிந்து கொள்வதில் இவன் காட்டிய விவேகமும், அந்த அழைப்புக்கு அடிபணிவதில் இவன் கொண்டிருந்த ஆர்வமும், அந்த அழைப்பை நிறைவேற்றுவதில் இவன் காட்டிய தீவிரமும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. இச்சம்பவங்களையெல்லாம் அதன் மெருகு குறையாமல் விவரிப்பதற்கு அறிவு கொஞ்சம் கூடுதலாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று இப்படிப்பட்ட நேரங்களில் நான் வருந்துவதுண்டு. ஏனெனில், பவுலடியாரின் மனமாற்றச் சம்பவத்தில் அவ்வளவு அழகான, ஆழமான காரியங்கள் மறைந்தும், பொதிந்தும் கிடக்கிறது. என்ன செய்வது, "ஆட்டுக்கு வாலை ஆண்டவன் அளந்துதான் வைத்திருக்கிறான்" என்ற முதுமொழியை நினைத்து தேற்றிக்கொள்ள வேண்டியது தான்.

இவ்வளவு சிறப்பான முறையில் ஆண்டவர் இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்டு, ஊழியத்தின் பாதையில் வல்லமையாய் பயன்படுத்தப்பட்ட பவுலடியார், தன்னுடைய இரண்டாவது நற்செய்திப் பயணத்தில், அன்றைய கிரேக்கத்தின் முக்கியப் பட்டணமாகவும், வியாபார கேந்திரமாகவும், கலாச்சார சீரழிவின் மையமாகவும், ஒழுக்கக்கேட்டின் உறைவிடமாகவும் இருந்த கொரிந்து பட்டணத்தில், கிறிஸ்துவின் நற்செய்தியை நிலைநிறுத்தி, ஒரு சபையை ஏற்படுத்தினார் (அப். 18:8). பிறகு, ஆவியானவரின் ஏவுதலினாலே, அவர்களுக்கு மூன்று (1கொரி 5:9) நிருபங்களை எழுதினார். அவைகளில், இரண்டு நம்முடைய புதிய ஏற்பாட்டில் உள்ளது.

இந்த இரண்டு நிருபங்களிலும், சொல்லப்போனால் வேறு சில நிருபங்களிலும், பவுலடியார் **கதவு** என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக, கொரிந்து பட்டணத்தாருக்கு எழுதி நமக்குக் கிடைத்திருக்கும் இரண்டு நிருபங்களிலும் "எனக்கு கதவு திறக்கப்பட்டிருக்கிறது" என்று கூறியுள்ளார். **ஏனெனில், இங்கே பெரிதும் அநுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது** (1கொரி 16:9) என்றும், **துரோவா பட்டணத்தில் கர்த்தரால் எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கிறது** என்றும் கூறுகிறார் (2கொரி 2:12). பரிசுத்த வேதாகமத்தில் "கதவு" என்பது குந்துகளாலும், கீல்களாலும் தாங்கிப் பிடிக்கப்பட்டு, முன்னும், பின்னும் நகர்ந்து கொண்டிருப்பவைகளை (அப் 5:19) மாத்திரம் சொல்லர்த்த ரீதியில் குறிக்காமல், உருவக ரீதியில், இன்னும் கூடுதலான பொருள் தரும்படியாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (யோவான் 10:7,9, மத் 26:33, அப் 14:27).

இப்படி உருவக ரீதியிலான கதவு பற்றித் தான் பவுலடியார், தனது இரண்டு கொரிந்தியர் நிருபங்களிலும் குறிப்பிட்டுள்ளார். அதாவது, "சுவிசேஷம் அறிவிக்கும் படியான வாய்ப்புகளை" அவர் கதவு என்று குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவின் பிரதான கட்டளையை ஏற்று, மூன்று நற்செய்திப் பயணங்களை மேற்கொண்ட பவுலடியாருக்கு, அன்றைய உலகின் பல தேசங்களிலும், பட்டணங்களிலும் கதவுகள் திறந்து தான் இருந்தது. அந்த வாய்ப்புகளையெல்லாம் அவர் குறிப்பிடும்போது, அவர் தன்னோடு ஊழியத்தில் இணைந்திருந்தவர்களையும் சேர்த்துக்கொண்டு "எங்களுக்குக் கதவு திறந்திருக்கிறது" என்று எல்லா இடங்களிலும் சொல்லாமல், **எனக்குக் கதவு திறக்கப்பட்டிருக்கிறது** என்று கூறியுள்ளதை நாம் கவனிக்கத் தவறக்கூடாது. அதாவது, கிறிஸ்துவின் காரியமாக, அவர் கட்டளைகளை நிறைவேற்றுவதற்குக் கிடைக்கும் வாய்ப்புகளை, "எங்களுக்கு" என்று பொத்தாம் பொதுவில் சொல்லி, யாராவது செய்யட்டும், அதிலே நமக்கும் பங்கு கிடைக்கட்டும் என்று எண்ணாமல், ஒவ்வொரு வாய்ப்பையும் "எனக்கு, எனக்கு" என்று எண்ணிக் காரியமாற்றியுள்ளார்.

ஒரு காரியத்தையோ அல்லது ஒரு பொருளையோ "எங்களுக்கு" என்று பொதுவில் சொல்வதற்கும், "எனக்கு" என்று தனிப்பட்ட உரிமையோடு கூறுவதற்கும் கண்டிப்பாக வேறுபாடு உண்டு. ஆம், "எனக்கு" என்று சொல்லும் போது ஒன்றின் மீது நமக்கு இருக்கும் ஆர்வத்தையும், ஈர்ப்பையும் அது படம் பிடித்து காட்டுகிறது. இந்தப் பொருளில் தான் பவுலடியார், "எனக்குக் கதவு

திறக்கப்பட்டிருக்கிறது".எனக் கூறியுள்ளார் என்றே தெரிகிறது. இன்றைக்கு நம்மில் எத்தனை பேர் ஊழிய காரியமாக இப்படிப்பட்ட உணர்வோடு செயல் பட்டுக் கொண்டுள்ளோம்?.

தேவனுக்கடுத்த காரியத்தில், கிறிஸ்துவுக்கடுத்த காரியத்தில், கிறிஸ்தவ ஜீவியத்திற்கடுத்த காரியத்தில், ஏதோ, பவுலடியாருக்கு மாத்திரம் தான் கதவு திறந்திருந்தது என்று நாம் நினைக்கத் தேவையில்லை. ஏனெனில், பட்சபாத மில்லாத தேவன் எல்லோருக்கும் அவருடைய காரியமாகச் செயல்படு வதற்கான கதவுகளைத் திறந்தே வைத்துள்ளார். வாய்ப்புகளாகிய அந்தக் கதவுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நம்முடைய பொறுப்பு. என் பக்தி வாழ்க்கைக்கான கதவு திறக்கப்படவில்லை, ஆகவே நான் தேவனை அறியவில்லை, ஆகவே மனந்திரும்பவில்லை, ஆகவே கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லை, ஆகவே இரட்சிப்படையவில்லை, ஆகவே நான் கிறிஸ்து கட்டின சபையை அறியவில்லை என்று நாம் யாரும் இப்பூமியின் வாழ்க்கை யிலும், நியாயத்தீர்ப்பின் நாளிலும் சொல்ல முடியாது. ரோமாபுரியாருக்குப் பவுலடியார் எழுதும் போது, "எப்படி யென்றால், காணப்படாதவை களாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டி ருப்பவைகளினாலே, உலக முண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும், ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை" (ரோம 1:20) என்கிறார்.

அப்படியானால், அருமையானவர்களே இப்பூமியின் வாழ்க்கையில் நம்முடைய பக்தி வாழ்வுக்காக, சர்வ வல்ல தேவனால் எப்படிப்பட்ட கதவுகள் நமக்காகத் திறந்து வைக்கப்பட்டிருகிறதென்று தெரிந்து கொள்ள முயற்சிப் போம்.

## I. கற்றுக்கொள்ளுங்கள் என்னும் கதவு

இப்பூமியின் வாழ்க்கையில், நமது பக்தி வாழ்க்கைக்காக நமக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் முதல் கதவு, தேவ காரியங்களைக் கற்றுக் கொள்ளும்படியான வாய்ப்பு என்னும் கதவு

எந்த ஒரு காரியத்தையும் உருப்படியாகவும், சிறப்பாகவும் செய்வ தற்கு, அது சம்பந்தப்பட்டவைகளை அறிந்து, கற்றுக் கொள்வது அவசிய மென்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இவ்வுண்மையைக் காலம் கடந்தாகிலும் உணர்ந்த நமது நடுவண் அரசு "அனைவருக்கும் கல்வி" என்ற திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. தனிமனித வளர்ச்சிக்கும், தேச முன்னேற்றத்திற்கும் கல்வியும், அறிவும் முக்கியம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கொஞ்ச காலம் இருந்து பிறகு இல்லாமல் போகும் சரீர வாழ்க்கைக்கே இப்படி கற்றுக்கொள்வது அவசியமானால் என்றென்றும் வாழும். நித்திய வாழ்க்கைக்குக் கற்றுக்கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நமது ஆண்டவர், இப்பூமியில் வாழ்ந்த நாட்களில் மானிடத்தைப் பார்த்துக் கொடுத்த அழைப்பில் கற்றுக் கொள்வதின் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார். **வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர் களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு**

**இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்.** அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப் பாறுதல் கிடைக்கும்" (மத் 11:28-29) எப்பொழுது இளைப்பாறுதல் கிடைக்கு மாம்? அவரிடத்தில் காற்றுக்கொள்ளும் போது, ஒருவேளை, கற்றுக் கொள்ளா விட்டால்? இளைப்பாறுதலில்லை. அப்படித்தானே. இத்தோடு இயேசு நிறுத்தாமல், கற்றுக்கொள்ளாமல் என்னிடத்தில் வரமுடியாது என்பதையும் உறுதி படுத்திவிட்டார். ...**ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளு கிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்** (யோவா 6:45) என்று.

கற்றுக் கொள்வதின் அவசியத்தை புதிய ஏற்பாடு மாத்திரம் தான் அழுத்திக் கூறுகிறதென்று நாம் நினைக்கத் தேவையில்லை. பழைய ஏற்பாடும் இதற்கு இணையான முக்கியத்துவம் கொடுத்தே உள்ளது. மோசே, தான் தேவனிடத்திலிருந்து பெற்ற பிரமாணங்கள் குறித்து இஸ்ரவேலருக்குச் சொல்லும்போது, "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் **போதித்து**, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் **பேசு**" என்கிறார். (உபா 6:7; 11:20) மோசே இட்ட இக்கட்டளை யைப் பின்னாளில் வந்த இஸ்ரவேலர்கள் மறந்தது எப்படிப்பட்ட எதிர் விளைவுகளைக் கொண்டு வந்ததென்பதை எரேமியாவின் வார்த்தைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். "நான் அவரவருக்கு விதித்த என் நியாயப் பிரமாணத்தை அவர்கள் விட்டு, என் சொல்லைக் கேளாமலும், அதின்படி நடவாமலும், தங்களுடைய இருதயத்தின் கடினத்தையும், தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி பாகால்களையும் பின்தொடர்ந்தார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 9:13,14). இவ்வசனங்களெல்லாம் **தேவ காரியங்களை நாம் கற்றுக்கொள்வது மிகவும் அவசியம்** என்று தான் எவ்வித சந்தேகத்திற்கிடமில்லாமல் கூறுகிறது.

ஆனால், அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை என்ன? தேவகாரியங்களையும், பக்திக்கடுத்த காரியங்களையும் கற்றுக்கொள்வதில் கிறிஸ் தவம் எந்தளவு நாட்டம் கொண்டுள்ளது? யாரோ எதையோ படித்து எப்படியோ போதிக்கட்டும், நமக்கு நேரமிருந்தால் ஏதாவது ஒரு கூட்டத் திற்கோ அல்லது ஆராதனைக்கோ போய் கொஞ்ச நேரம் அமர்ந்துவிட்டு வந்தால் போதுமென்று தானே நினைக்கிறது! இது எப்படி நியாயமாகும்? நாம் ஒவ்வொருவரும் தேவ காரியங்களைக் கற்றுக்கொள்வது அவசியம். 12 சீடர் களைத் தெரிந்து கொண்ட இயேசு, 3 **ஆண்டுகள்** அவர்களைத் தன்னோடு வைத்து **கற்றுக்கொடுத்ததையும்**. பவுலடியார், எபேசு பட்டணத்தில் திறன்னு என்னும் ஒருவனுடைய பள்ளியில் தங்கியிருந்து **2 ஆண்டுகள்** தினந்தோறும் கற்றுக்கொடுத்ததையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் (அப் 19:9,10).

கற்றுக்கொள்ளுங்கள் என்பதோடு இயேசுவானவர் இன்னும் ஒருபடி மேலே சென்று, "ஆராய்ந்து" பாருங்கள் என்கிறார். "வேத வாக்கி யங்களை **ஆராய்ந்து பாருங்கள்**; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு" (யோவா 5:39) என்று. அப்படியானால், கற்றுக்கொள்வதும், ஆராய் வதும் எதற்காக? நித்திய ஜீவனுக்காக! ஆக, நித்திய ஜீவனை நாம் பெற

வேண்டுமானால், நாம் தேவகாரியங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, கிறிஸ்துவால் நமக்குக் கொடுக்கப்பட்ட பூரண பிரமாணமாகிய புதிய ஏற்பாடு, நமக்காக என்ன சொல்லுகிறதென்று கற்றும், ஆராய்ந்தும் பார்க்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும், அவரோடு கூட நித்திய வாழ்வை பெற்றுக் கொள்ள வேண்டுமென்று தான் தேவன் இப்பூமியின் வாழ்க்கையில் இந்தக் கதவைத் திறந்து வைத்துள்ளார். ஆகையால், நமக்காக யாரோ படித்துப் போதிக்கட்டும் என்று இறுமாந்திராமல், நாமாகவே, கிறிஸ்துவின் உபதேசங் களைக் கற்று, தியானித்து, ஆராய்ந்து, அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நித்திய ஜீவனுக்கான வாய்ப்பைப் பிரகாசமாக்கிக் கொள்ளுவோமாக!

## II. இரட்சிப்பு என்னும் கதவு

இப்பூமியில் நமது பக்தி வாழ்க்கைக்காகவும், மறுமையில் நித்திய வாழ்க்கைக்காகவும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் அடுத்த கதவு, பாவங் களால் கறைபட்டிருக்கும் ஆத்து மாக்களை இரட்சித்துக் கொள்ளும்படியான வாய்ப்பு என்னும் கதவு.

சர்வ வல்ல தேவனால் இலவசமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் இரட்சிப்பு பற்றி துளியும் கவலைப்படாத ஒரு சந்ததியில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். ஆம், ஆத்தும இரட்சிப்பு குறித்து மருந்துக்குக் கூட மக்களுக்குக் கவலை இல்லை. கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைத்திருக் கிறோம் என்று கூறுபவர்கள் கூட, இயேசு இப்பூமிக்கு வந்ததின் நோக்கத்தை சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஏதோ, இயேசு அவர் மீது நம்பிக்கை வைப்பவர்களின் இப்பூமிக்குரிய வாழ்க்கையை செழிக்கச் செய்வதற்கும், அவர்களுக்கு ஏற்படும் நோய் நொடிகளிலிருந்து காப்பாற்ற வுமே வந்தார் என்று நம்பிச் செயல்படுகின்றனர். இயேசு ஆண்டவரைப் பற்றிப் போதிப்பவர்களும் பெரும்பாலும் இதையே மையமாக வைத்துப் போதிக்கின்றனர். ஆனால், இயேசு இப்பூமிக்குரிய வாழ்க்கைக்கு முக்கியத் துவம் கொடுத்து ஒருபோதும் ஒரு வார்த்தை பேசினதில்லை. அவராலே வெளிப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடும் அழிந்து போகும். இப்பூமிக்குரிய வாழ்க்கைக்கு எவ்வித முக்கியத்துவமும் கொடுக்கப்பதில்லை.

இயேசுவின் நாட்களில் அநியாயமாய் ஜனங்களிடம் வரிவசூல் செய்து வந்த சகேயு என்ற குள்ளனை இயேசு எரிகோவில் சந்தித்து, அவனது மனமாற்றத்திற்குப் பரிசாக, "இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது" (லூக் 19:9) என்று சொன்னதற்குப் பிறகு ஒரு பெரிய உண்மையை வெளிப் படுத்தினார். அது, "**இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்**" என்பது (19:10). இதே கருத்தை, ஆவியானவரின் துணையோடு பவுலடியார், விசுவாசக் குமாரனாகிய தீமோத்தேயவுக்கு எழுதும் போது, **பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமு மானாது** என்கிறார் (1தீமோ 1:15). ஆண்டவரின் அருள் வாக்கும், அப்போஸ்தலனின் ஆவியின் வாக்கும், இயேசுவானவர், மனுக்குலத்துக்கு **இரட்சிப்பைக்** கொடுக்கும்படியே வந்தார் என்று தெளிவாகக் கூறுகிறது.

அப்படியானால், இந்த இரட்சிப்பு நம்முடைய வாழ்க்கையில் எந்தளவில் உள்ளது? நாம் ஒவ்வொருவரும் இழந்து போன நிலையிலிருந்து மீட்கப்பட்டு விட்டோமா? இயேசுவானவர் இப்பூமிக்கு வந்து, நம்மெல்லாருக்காகவும் பாடுகள் பலபட்டு, கோரச்சிலுவையில் இரத்தம் சிந்தினதின் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டோமா? எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே தேவச்சித்தமாயிருக்கிறது (1தீமோ 1:15).

நான் எப்படி என் பாவங்களிலிருந்து இரட்சிப்படைய முடியும் என்று நாம் யாரும் தடுமாற வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், சபைச் சரித்திரத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம், பல மனமாற்றச் சம்பவங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் காணப்படும், 3000 பேர் பெந்தெகொஸ்தே நாளில் பாவ மன்னிப்படைந்த சம்பவம் இதற்கு முத்தாய்ப்பாக உள்ளது. ஆயிரக்கணக்கில் கூடியிருந்தபோது, பேதுரு செய்த அந்த மகா பிரசங்கத்தைக் கேட்ட ஒரு கூட்ட மக்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, “சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டபோது, **ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்** என்று சொல்லி... “இன்னும் அநேக வார்த்தைகளாலும் சாட்சி கூறி, மாறுபாடுள்ள இந்தச் சந்ததியை விட்டு விலகி உங்களை **இரட்சித்துக் கொள்ளுங்கள்** என்றும் புத்தி சொன்னான்” (அப் 2:37-40) அன்றைய தினம் 3000 பேர் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள் (அப் 2:41,47).

மானிடத்தின் மறுமையின் வாழ்வுக்காக **அன்றைக்குத் திறக்கப்பட்ட இரட்சிப்பின் கதவு** இன்றைக்கும் திறந்திருக்கிறது. இந்த இரட்சிப் பின் கதவு ஒரு குறிப்பிட்ட சாராருக்கு மாத்திரமல்ல. சுவிசேஷத்தின் மேன்மை குறித்துப் பவுலடியார் ரோமாபுரியாருக்குக் கூறும் போது, “கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். **முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டா வதற்கு அது தேவபெலனாயிருக்கிறது**” என்றார் (ரோம 1:16). ஆகவே, விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக, என்ன மொழி பேசுகிறவர்களாக, எப்படிப்பட்ட நிறம் கொண்டவர்களாக இருந்தாலும் இரட்சிப்பு சாத்தியமே.

ஆனால், அந்த இரட்சிப்பின் கதவுக்குள் பிரவேசிக்க, அதற்கு முன் செய்ய வேண்டிய காரியங்கள் உண்டு. பெந்தெகொஸ்தே நாளில் கூடி வந்தவர்களைப் போல், முதலாவது, இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு விசுவாசிக்க வேண்டும் (அப் 2:37). அடுத்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறவேண்டும் (அப் 2:38). அத்தோடு, எத்தியோப்பிய மந்திரி செய்தது போல, ஞானஸ்நானத்திற்கு முன்பாக, இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் (அப் 8:37). ஆக, நற்செய்தியைக் கேள்விப்பட்டு, விசுவாசித்து மனந்திரும்பி,அறிக்கை செய்து, ஞானஸ்நானம் பெறும் **யாவருக்கும் இரட்சிப்பின் கதவு திறந்தே உள்ளது**. இந்த இரட்சிப்பின்

கதவுக்குள் நீங்கள் இதுகாறும் பிரவேசிக்காமல் இருந்தால், கிறிஸ்துவின் உபதேசத்தின்படியான இந்தப் படிகளைக் கடந்து அதில் பிரவேசிக்க உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

## III. பரலோகம் என்னும் கதவு

இப்பூமியில் நமது பக்தி வாழ்வுக்காகவும், மறுமையில் நமது நித்திய வாழ்வுக்காகவும், திறந்து வைக்கப்பட்டிருக்கும் இன்னுமொரு கதவு, கிறிஸ்துவால் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கு பரலோகம் என்னும் கதவு.

பரலோகம் பற்றி நான் பேசினால் ஒருவேளை அது நம்புவதற்கு ஏதுவில்லாமல் இருக்கலாம். ஆகவே, ஆண்டவர் இயேசுவின் அருள் வாக்கையே கவனியுங்கள். **என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன். நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்**. (யோவா 14:2,3) இயேசுவானவர் விவரிக்கும் இந்த பரலோகத்தில் யார் யார் இருக்கிறார்கள் என்பதை அறிந் தால், அங்கே போக வேண்டுமென்ற நம்முடைய ஆவல் மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு. ஆம், தேவன் அங்கிருக்கிறார் (1 ராஜா 8:30) கிறிஸ்து (எபி 9:12,24) பரிசுத்த ஆவியானவர் (சங் 139:7,8) தேவ தூதர்கள் (மத் 18:10) ஆகியோர் அங்கிருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, பரலோகில் என்ன **இருக்கும்**, எவைகள் **இருக்காது** என்பதையும் அறிந்தால், உடனடியாக அங்கே போய்விட வேண்டுமென்ற எண்ணம் உண்மையுள்ள இருதயம் கொண்ட மனிதர் அனைவருக்கும் ஏற்படும். ஆம், இப்பூமியின் வாழ்க்கையில் எனக்குக் கிடைக்கமாட்டேன் என்கிறதே என்று நாம் ஏங்கும் **மகிழ்ச்சி** (லூக் 15:7,10) **இளைப்பாறுதல்** (வெளி 14:13) **சமாதானம்** (லூக் 16:19,25) மற்றும் **நீதி** (2 பேது 3:13), **மகிமை** (ரோம 8:17,18) ஆகிய அனைத்தும் அங்கே **பரிபூரணமாக** இருப்ப தோடு, இம்மண்ணுலக வாழ்க்கையில் நம்மை அவ்வப்போது தாக்கி நிலை குலைய வைக்கும் **மரணம்** (வெளி 21:4), **துக்கம்** (வெளி 21:4) **கண்ணீர்** (வெளி 21:4) **கவலை** (வெளி 7:16) **அலறுதல்** (வெளி 21:4) **சாபம்** (வெளி 22:3) ஆகிய இவை எதுவுமே **பரலோகத்தில் இருக்காது**. இந்த உண்மை களை, அப்பட்டமாகப் பவுலடியார் அறிந்திருந்தபடியால் தான், ".... தேகத்தை விட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அதிக அதிக நன்மையாயிருக்கும்" (பிலி 1:23) என்று பிலிப்பியருக்கு எழுதும் போது கூறியுள்ளார்.

அப்படியானால், இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் பரலோகம் பற்றி எப்படிப்பட்ட நினைப்போடு வாழ்ந்து கொண்டுள்ளோம்? பரலோகமாகிய இந்த நித்திய வீடும், அங்கு செல்பவர்களுக்குக் கிடைக்கும் நீதியின் கிரீடமும் ஏதோ பவுலைப் போன்ற தேர்ந்த பரிசுத்தவான்களுக்குத் தான் கிடைக்கும் என்று எண்ணத் தேவையில்லை. தீமோத்தேயுவுக்கு எழுதும் போது, இதே பவுலடி யார் எப்படிக் கூறுகிறார் என்று பாருங்கள். "நல்ல போராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்

கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை **எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்** (2தீமோ 4:7,8). ஆம், அவர் பிரசன்ன மாகுதலை, **அவர் சித்தத்தின்படி செய்து** வாழ்ந்து, எதிர்பார்த்துக் கொண்டி ருக்கும் யாவருக்கும் தந்தருளுவார். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை.

பரலோகம் இப்படி மகிமையுள்ள இடமாக இருந்து, அவரை எதிர் பார்ப்பவர்களுக்கு ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருந்தாலும், அதில் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவதற்கு நாம் செய்ய வேண்டிய ஒரு காரியம் உண்டு. நாம் நம்முடைய இருதயமாகியக் கதவை இயேசுவுக்குத் திறந்து கொடுக்க வேண்டும். "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், **ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,** அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி 3:20) நம்மிடத்திலே நற்செய்தியைக் கொண்டு வருவதின் மூலம், நம்முடைய இருதய கதவைத் தட்டும் வேலையை அவர் செய்கிறார். ஆனால், நமக்காக இயேசு கதவைத் திறக்கமாட்டார். **சுவிசேஷத் தின் போதனை** என்ற சத்தத்தைக் கேட்டு நாம் தான் திறக்க வேண்டும. கிறிஸ்து வையும், கிறிஸ்து கொடுத்த புதிய ஏற்பாட்டின் உபதேசத்தையும் ஏற்று, கீழ்ப் படிந்து அவர் நம்மில் வாசம் செய்ய அனுமதிக்க வேண்டும் (யோவா 14:23) மேலும், முடிவுபரியந்தம் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்து வாழ வேண்டும் (மத். 10:22). அப்பொழுது தான் பரலோகம் நமக்கு சொந்தமாகும்

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், நம்மில் அநேகரைப் போல, பரலோக பாக்கியத்தைக் குறித்த எண்ணமற்றவர்களாக இராமல், அதைக் குறித்த சிந்தையுள்ளவர்களாகவே இருந்துள்ளனர். "ஏனெனில், இந்தக் கூடாரத்திலே நாம் தவித்து, நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள மிகவும் **வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்**" (2கொரி 5:2). என்றும், இன்றும், நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து, கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர **எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்** (பிலி 3:20) எனவும் பவுலடியார் சபைகளுக்கு எழுதும் போது கூறியுள்ளார். இப்படிப்பட்ட வாஞ்சையும், எதிர் பார்ப்பும் தேவன்மீது நம்பிக்கையும், கிறிஸ்துவின் உபதேசத்தின் மீது பிடிப்பும் கொண்ட ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும். ஆனால், இருக்கிறதா? சொல்லுங்கள்.

அருமையான வாசகர்களே, இப்பூமியின் வாழ்க்கையில், தேவனால் நமக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் இம்மூன்று கதவுகளையும் நாம் ஞானமாகப் பயன்படுத்தி நித்திய வாழ்க்கையை உறுதி செய்து கொள்ள சர்வ வல்ல தேவன் நமக்கு அநுக்கிரகம் செய்வாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

**எதிர்வரும் அக்டோபர் 8,9 - 2008 (அரசு விடுமுறை நாட்கள்) தேதிகளில் நடக்கும் பதினோராம் வேதாகம கருத்தரங்கிற்கு உங்கள் வருகையையும், ஆதரவையும் ஜெபத்தோடு எதிர்நோக்குகிறேன்**

**- ஆசிரியர்.**

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்! பங்கு பெறுங்கள் !!

காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்

எக்லீசியா வேதாகமக் கல்லூரியும்

இணைந்து நடத்தும்

# பதினொன்றாம் வேதாகம கருத்தரங்கம்

# ELEVENTH ANNUAL BIBLE LECTURESHIP

நாள் : **அக்டோபர் 8,9 - 2008**

**(புதன், வியாழன் - அரசு விடுமுறை நாட்கள்)**

நேரம் : **புதன் காலை 9:00 - மாலை 5;00 மணி வரை**

**வியாழன் காலை 9:00 - 12:30 மணி வரை**

இடம் : **கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

**கருப்பொருள் :** "ஆகையால் பிழைத்தாலும், மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோம. 14:8)

பேச்சாளர்கள் : **தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்**

❀ வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.

❀ தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி**

**கிறிஸ்துவின் சபை**

195, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

PH. : 04257 - 230030, 230603 Cell : 98427 - 30382, 99655 - 303857

# இயேசு கிறிஸ்து மீண்டும் எப்பொழுது வருவார்?

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு அவ்வப்பொழுது சிலர் நாள் குறித்துக் கொண்டேயுள்ளனர். அவருடைய வருகைக்கு எப்படி அடிக்கடி நாட்களை முன் குறிக்கிறார்களோ அப்படியே அடிக்கடி அவர்கள் தோற்றுப் போகவும் செய்கிறார்கள்.

எந்த ஒரு மனிதனுக்கும் அவருடைய இரண்டாம் வருகை குறித்து அவர் வெளிப்படுத்தவில்லை என்பதை, நாள் குறிக்கும் இந்த விந்தை மனிதர்கள் ஒரு போதும் கற்றுக் கொள்ளமாட்டார்களா?

ஒருவேளை இயேசு கிறிஸ்து அவருடைய இரண்டாம் வருகைக்கான காலத்தை வெளிப்படுத்த வேண்டுமென விரும்பியிருந்தால், அவரால் அதை செய்திருக்க முடியும். தன்னை நேசிக்கும் அவருடைய பிள்ளைகள் வேதாகமத்தில் சிரமப்பட்டுத் தேடிமறைந்திருக்கும் தேதியை கண்டுபிடித்துக் கொள்ளட்டும் என்று உருவக மொழியில் வெளிப்படுத்தியிருக்கமாட்டார். அவர் அப்படிச் செய்யாதபடியால் கண்டிப்பாக அதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம், **எப்பொழுதும் அவருடைய பிள்ளைகள் அவருக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதுதான்**. கடைசி நிமிடம் வரை காத்திருந்து இறுதிமணி வேளையில் மனந்திரும்பி கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாவது அவருடைய நோக்கமல்ல.

கர்த்தர் சீக்கிரம் வருகிறாரென்று அநேகர் கூறுகின்றனர். அதாவது நம்முடைய வாழ்நாள் காலத்திலேயே கட்டாயம் கிறிஸ்து வந்துவிடுவார் என அவர்கள் விளம்புகின்றனர். அப்படிச் சொல்வது உண்மையாகக் கூட இருக்கலாம், உண்மையல்லாமலும் போகலாம்.

அப்போஸ்தலர்களும், ஆதித் திருச்சபை மக்களும் கர்த்தர் வெகு சீக்கிரத்தில் திரும்ப வருவார் என்றும், அவர்களுடைய வாழ் நாள் காலத்திலேயே வரலாம் என்றும் எதிர்பார்த்தனர்.

கிறிஸ்துவானவர் பிதாவிடத்திற்கு திரும்பிச் சென்றதிலிருந்து அவர் சீக்கிரம் வருகிறதற்கு எதிர்பார்க்கப்பட்டு வருகிறார் என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால் அவர் இன்னும் வரவில்லை.

அவர் இன்னும் வரவில்லை என்பதால் அவர் வரப்போவதே இல்லை என்பது இதன் பொருள் அல்ல. நாம் எதிர்பார்க்கும் நேரத்தில் அல்ல, **அவர் குறித்த நேரத்தில்தான் அவர் வருவார்**.

கிறிஸ்துவானவர், "இதோ சீக்கிரமாய் வருகிறேன்" என்று சொல்லிச் சென்று இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்து விட்டபடியால் அவர் சீக்கிரம் வருகிறார் என்று சொல்வதே தவறு என்று சிலர் நினைக்கின்றனர்.

அவர் எப்பொழுது வந்தாலும், இன்றைக்கே வந்தாலும் அல்லது இன்றிலிருந்து பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து வந்தாலும், நித்தியத்தோடு இந்த கால அளவை ஒப்பிட்டுப்பார்த்தால் இவை குறுகிய காலமே. ஆகையால் இயேசு கிறிஸ்து சீக்கிரம் வருகிறார் என்று கூறுவதில் தவறேது மில்லை.

கிறிஸ்துவின் வருகை சம்பந்தமாக அநேக காரியங்கள் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை நேசித்து மதிக்கும் ஒவ்வொருவரையும் அவைகள் திருப்திப்படுத்த வேண்டும்.

1. நான் மறுபடியும் வருவேன் என்று இயேசு கூறினார். அவர் சொல்வதைக் கேளுங்கள், "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமா யிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்" (யோவான் 14:1-3). இவ்வசனங்கள் நிச்சயமானதும் உறுதியானதுமாகும்.

2. பரலோகத்தில் இருக்கிற பிதா தவிர வேறு யாருக்கும் அவருடைய வருகை தெரியாது என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு தாமே கூறுவதைக் கேளுங்கள். "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றோருவனும் அறியான். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத்தேயு 24:36). அந்த நாள் பிதாவுக்கு மட்டுமே தெரியு மானால் மனிதன் எவ்வாறு அத்தகவலைப் பெற்றுக்கொள்ள முடியும்?

3. இயேசு கிறிஸ்து இரவில் திருடன் வருகிற விதமாய் வருவார் என்று வேத வாக்கியங்களில் நாம் காண்கிறோம். "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்" (2பேதுரு 3:10). அவர் ஒரு திருடன் அல்ல. ஆனால் யாரும் எதிர்பாரா வண்ணம் திருடனைப் போல வருவார்.

4. கர்த்தர் திரும்ப வரும்பொழுது........ "வானங்கள் மடமட என்று அகன்றுபோம். பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேதுரு 3:10), இயேசு கிறிஸ்து திரும்ப அக்கிரமக்கார்ரரை அழித்து அவருடைய பிள்ளைகளை ஆயிரம் வருடம் அரசாளுவார் என்பது மேற்கண்ட வசனப்பகுதிக்கு முற்றிலும் விரோதமானது.

5. கிறிஸ்துவின் வருகையின் போது நீதிமான்கள், அக்கிரமக்காரர் ஆகிய யாவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இதையே யோவான் ஆசிரியர், "இதைக் குறித்து நீங்கள் ஆச்சிரியப்படவேண்டாம், ஏனெனில் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிற வர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக் கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28,29) என்று கூறுகிறார்.

6. இயேசு கிறிஸ்து வரும்பொழுது உயிரோடிருக்கிற நீதிமான்கள் அவரை தரிசிக்கும்படியாக மேகங்களுக்குள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பவுல் அடியார் இதைக் குறித்து இவ்விதமாகக் கூறுகிறார், "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், எக்காளத் தோடும் வானத்திலிருந்து, இறங்கி வருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள், பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர் கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்" (1தெச. 4:16,17).

7. இராஜ்யமாகிய சபைக்கு புறம்பேயிருக்கிறவர்களை ஒன்று சேர்த்து நரகத்திலே தள்ளும்படியாக அந்நாளில் கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல் களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டா யிருக்கும் (மத்தேயு 13:41,42).

8. பெரிதும், இறுதியுமான நியாயத் தீர்ப்பு நடக்கும். எபிரெய ஆசிரியர் இவ்விதமாய் சொல்கிறார், "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் எல்லா மனுஷருக்கும் நியமிக்கப்பட்டிருக் கிறது" (எபிரெயர் 9:27). இதையே பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதும் பொழுது, "ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி. 5:10) எனக் குறிப்பிடுகிறார்.

9. நியாயத்தீர்ப்பிலே நீதிமான்கள் நித்தியஜீவனை அடையவும், என்றென்றும் கர்த்தரோடிருக்கவும் போவார்கள். ஆனால் அக்கிரமக்காரரோ நித்திய நரகத்திலே தள்ளப்படுவார்கள் (மத்தேயு 25:46).

ஆம், கிறிஸ்து மீண்டும் வருவார். உண்மையாகவே விரைவில் வருவார். அப்பொழுது அநேக காரியங்கள் நிகழும், ஆனால் அவைகள் இன்றைக்கு அநேகர் போதிப்பதற்கு மாறாக இருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் வருகை பற்றியும், அப்பொழுது நடக்கும் சம்பவங்கள் குறித்தும் நீங்கள் வஞ்சிக்கப்படாமல் எச்சரிக்கையாயிருங்கள். அவர் ஒருமுறை வந்துவிட்டால், பிறகு அவரை சந்திக்க ஆயத்தமாகுதல் என்பது இயலாத ஒன்று.

இப்பொழுது நம்முன் இருக்கும் பிரதான கேள்வி, **இந்த நிமிடத்தில் கிறிஸ்துவை சந்திக்க நான் ஆயத்தமா?** என்பதுதான். உங்கள் பதில், "இல்லை" என்றால் தயவு கூர்ந்து உங்களுக்கு நேரமும் வாய்ப்பும் இருக்கும் போதே ஆயத்தமாகிக் கொள்ளுங்கள். ஏனெனில், இயேசு கிறிஸ்து வருவார் என்பது அதிநிச்சயமானது. அவர் எப்பொழுது வருவார் என்பதுதான் நமக்குத் தெரியாது, ஆனால் அவர் நிச்சயம் வருவார். மீண்டும் கேட்கிறேன், அவரை சந்திக்க நீங்கள் ஆயத்தமா?.

**J.C. சோட்**

பெண்கள் பகுதி

# நம்முடைய பிள்ளைகளுக்கு முன்னுரிமைகளை கற்றுத் தருதல்

அற்புத படைப்பான தொலைக்காட்சியின் மூலம், நாம் நம் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளும் அறையிலிருந்தபடியே, பூமியின் நெடுந் தொலைவு முனைக்கு பயணம் செய்யும் வாய்ப்பை, இப்போது பெற்றுள்ளோம்.

நான் அப்பேற்பட்ட ஒரு பயணத்தை சமீபத்தில் மேற்கொண்டேன். பாதுகாப்பற்ற அந்த பயணத்தை, நீதிக் கதைகளுக்குச் சொந்த பூமியாகிய "லடாக்" என்ற இடத்துக்கு மேற்கொண்டேன். அங்கே பல நூற்றாண்டு களாகியும், இன்னும் மாறாத பழக்கங்கள் வழக்கத்திலிருப்பதை கண்டேன்.

அந்த மலைவாழ் மக்கள், தாங்கொண்ணா துன்பத்தையும், எதையோ இழந்த நிலையோடு இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் மாறுபட்ட வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளியே இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு விசித்திரமான இடம்! என்ன ஆச்சரியமான இடம்! என்று எந்தவொரு பார்வையாளரும் நினைப்பார்கள். இந்த இடத்தை வந்து பார்வையிடுவ தென்பது, கடிகாரத்தை தலை கீழாக ஓடச் செய்வது போன்றது. கட்டாயமாக வெளியே உள்ள மக்கள் இங்கு வந்து, இந்த அமைதியான கலாச்சாரம் கொண்ட மக்களை, மற்ற இருபத்தோராம் நூற்றாண்டின் நாகரீகம் கொண்ட வாழ்க்கையைப் போல மாற்றமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

ஆனால், இங்கே மனிதர்கள் எந்தவொரு வசதியும், மருத்துவரும், மருந்துகளும், தங்களுடைய அன்றாட கடினமான வேலையை சுலபமாக்கித் தர எந்தவொரு இயந்திரமும் இன்றி வாழ்ந்தும், செத்தும் கொண்டிருக்கிறார் கள். இதிலும் கொடுமை என்னவென்றால், தேவனுடைய சுவிசேஷம் இங்கு சென்றடையாதிருத்தல் இன்னும் துக்கமான விஷயமாகும்.

பெரும்பாலும், சீனாவில் வசிக்கும் மக்கள் புத்தமதத்தை சார்ந்தவர் களாகவே உள்ளனர். அன்றாட வாழ்க்கையில் பெரும்பாலான நேரம் புத்த மத சடங்குகள் சம்பந்தமாகவே சுழன்று கொண்டுள்ளது.

பொதுவாக வழக்கத்தில் இல்லாத ஒரு பழக்கம் இங்கே காணப்படு கிறது. குடும்பத்தில் உள்ள தலைச்சன் மகன், அல்லது பிரியமான மகன் அவனுடைய சிறுவயதிலிருந்தே, பல சமயங்களில் பிறந்ததில் இருந்து கூட, புத்த மதத்துறவி ஆவதற்காக பிரித்தெடுக்கப்பட்டு விடுகின்றனர். இந்த குழந்தைகள் தாய்களுக்கு முன் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமையோடு வளர்க்கப்படுகின்றனர். சிறுபையன்களாக இருக்கும் போதே அவர்கள் துறவி மடத்திற்குச் சென்று அங்குள்ள துறவிகளுடன் சேர்ந்து பயிலுகின்றனர்.

எப்படி இந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்துகிறார்கள், அவர்களும் தங்கள் பெற்றோரின் தீர்மானத்திற்கு செவி சாய்க்கிறார்கள்? என்பது நமக்கு கேள்வியாக இருக்கிறது.

லடாக்கில் எப்படியாவது ஒரு துறவியாக வரவேண்டும் என்ற ஒரு மனகிளர்ச்சியும், மனதார உய்த்து உணர்ந்து செயல்பட்டதே இதற்கு காரணம் என்பது தான் இதற்கான சரியான பதில் ஆகும். இந்த பதவி இரண்டு விசேஷ நபர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. முதற் பிறந்த மகன், அதிலும் விசேஷமாக மிகவும் நேசிக்கப்பட்ட மகன்! ஒரு குழந்தையானது, சிறுவயதிலிருந்தே தனக் கென்று சிறந்த ஒரு பொறுப்பு உண்டு என்பதை அறிந்து, தன், வாழ்க்கையை அர்ப்பணித்தும், பணியையும் உணர்ந்து வளருமாறு கற்பிக்கப்படும் பொழுது, தான் இவ்வாறு ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக வளர்க்கப்படு வதை உணர்ந்து அதைப்பற்றிய பெருமையும் படுகிறது. தன்னுடைய பெற்றோர்கள் தன்னை மற்ற குழந்தைகளை விட சற்று அதிக அளவில் மதிக்கிறார்கள் என்ற முழு நம்பிக்கையும் அதன் இருதயத்தில் ஏற்படுகிறது. அவன் கடவுளுக்காக தன் குடும்பத்தின் சார்பில் சேவை செய்வதால், அவன் **விசேஷித்தவன்** என்ற பெயரைப் பெறுகிறான்.

இந்த விதமான கலாச்சாரமானது, லடாக்கில் எத்தனை குடும்பங்கள் உள்ளதோ அத்தனை புத்த துறவிகள் உள்ளனர் என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

அதற்கு நேர்மாறாக, இன்றைக்கு உலகிற்கு ஆசீர்வாதமாக இருக்கும் வகையில் ஊழியர்கள் என்ற முறையில் மிகக் குறைந்த சதவிகிதத்தினரே உள்ளனர். இதைப் பார்க்கும் போது, மிக அருமையான ஒரு கேள்வி எழும்பு கிறது. கிறிஸ்தவக் குடும்பங்களில் ஆவிக்குரிய சேவை செய்யவும், போதிக் கவும், கிறிஸ்துவின் உண்மையான ஊழியனாக இருந்து செயல்படவும் ஏன் மிகக் குறைந்த இளைஞர்களே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்?

இதற்கு பதில் என்னவென்று பார்த்தால், இந்த மாதிரியான அர்ப்பணிப்பு பற்றி பெற்றோர்களும், சபையும் செயல்படும் விதமே காரணமாகும். நம் பிள்ளைகள் சிறுவயதாயிருக்கும் போதே **வெற்றி யுள்ளவனாக** வரவேண்டும் என எதிர்பார்த்து, அவர்களுக்கு அதை போதித்திருக்கிறோமோ? வெற்றியுள்ளவன் என்கிறபொழுது, **அதிகமாக சம்பாதித்தால், நீ மிகவும் பாக்கியசாலி** என்று சொல்லியிருக்கிறோமா? அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றி பேசும் போது நீ ஒரு மருத்துவராக, வக்கீலாக, வங்கிக் கணக்கராக, ஆசிரியராக வரவேண்டும் என்று கூறிவிட்டு, ஒரு போதகராக வரவேண்டும் என்பதைச் சொல்லாமலே விட்டு விடுவது டன், அதைப்பற்றி குறைத்து மதிப்பிட்டும் பேசியுள்ளோமா? முழு நேர ஊழியர்களை ஏதோ அவர்கள் மூன்றாந்தர கிறிஸ்தவர்கள் என்றும், கூலிக்காக வேலை செய்கிறவர்கள் என்றும் மதிப்பே இல்லாத ஒரு வேலை செய்கிறார்கள் என்றும் கூறியுள்ளோமா?.

ஒருவேளை நம்முடைய பிள்ளையோ, பையனோ ஒரு ஊழியனை திருமணம் செய்கிறார்களென்றால், அதை நாம் தடை செய்கிறோமா? அவர்கள் பெரியவர்களாகி, வெளி நாடுகளுக்குச் சென்று, மிஷனரிப் பணி செய்ய கனவு கண்டு கொண்டிருப்பார்களானால், நாம் அதற்கு எதிராக செயல்படுகிறோமா?.

முதலாவதாக, அவர்கள் உலகக் கல்விகளிலே சிறந்து விளங்க வேண்டு மென்று வலியுறுத்துகிறோம்? ஒருவேளை, அவர்கள் கணிதம், வியாபாரம், இசை, கலை, விளையாட்டு போன்ற காரியங்களில் சிறு வயதிலிருந்தே அவன் திறமை கொண்டவனாயிருந்தால், அதையே தொடர்ந்து செய் என்று கூறுகிறோமா? ஊழியம் செய்வதில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லை என்று அவர்களுக்கு சுட்டிக் காட்டுகிறோமா?.

இன்றைக்கு நம்மில் வெகு சில பிள்ளைகளே ஊழியர்களாக வருவதற்கு காரணம், நாம் இதன் சிறப்பினை அவர்களுக்கு எடுத்துக் காட்டாததேயாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய வீட்டில் ஒரு ஊழியக்கார னாக ஒருவன் வேலை செய்ய வேண்டும் என்று நம்புவதைக் காட்டிலும், லடாக்கில் வசிக்கும் மக்கள் புத்த மதத்திலேயும், புத்த சிஷ்யனாக வேலை செய்வதிலும் கௌரவமும், அதிக நம்பிக்கையும் கொண்டுள்ளனரே!

நம்முடைய எண்ணத்திலே பின் என்னதான் தவறு செய்து கொண்டுள்ளோம்? நம்முடைய வலியுறுத்தலில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய முன்னுரிமைகளில் என்ன தவறு செய்து கொண்டிருக்கிறோம்?

பழைய ஏற்பாட்டு கட்டளையில் கூட தேவன் சொல்லும் போது, "இஸ்ரவேல் புத்திரருக்குள் மனிதரிலும், மிருக ஜீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறனைத்தையும் எனக்குப் பரிசுத்தப்படுத்து; அது என்னுடையது" என்றார் (யாத். 13:2).

அதைவிட சிறந்த உடன்படிக்கையான புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்ந்து வரும் நம்மிடம் அவர் குறைந்ததையா எதிர்பார்ப்பார்?.

இந்தக் கட்டுரை வாசிக்கும் என் அன்பிற்குறிய தாய்மார்களே! உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுரிமையை கற்றுக் கொடுத்தலில் நம்முடைய பங்கு எவ்வாறு உள்ளது? இந்தக் கட்டுரை நம்முடைய மனதிற்கு ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்தும் என்றே நம்புகிறேன். நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய **"உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்"** என்றதில் நாம் எந்த அளவு நம்மை ஈடுபடுத்தியுள்ளோம். இன்றைக்கு நாகரீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்கள், தங்கள் மகள் கம்ப்யூட்டர், விஞ்ஞானம் இவைகளில் சிறந்து வெளிநாடு சென்று அதிக பணம் சம்பாதித்து பேரோடும், புகழோடும் வாழவேண்டுமென்று அதற்கு தங்கள் நேரம், பணம், உழைப்பு எல்லாவற்றையும் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த **லடாக்கில்** உள்ள நிலையை பார்க்கும்போது உண்மையாகவே அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணுகிறது. வீட்டுக்கு ஒரு புத்த துறவி! துறவி!! என்ன ஆச்சர்யம்! நம்முடைய குடும்பத்தில் உள்ள ஆண்மக்களை ஊழியனாக வருவதற்கு நாம் சிந்தித்திருக்கிறோமா? அதற்காக முயற்சி எடுத்திருக்கிறோமா? ஜெபிக்கிறோமா? நாமும் அதற்காக முன் வருவதில்லை. அப்படியே முன் வந்து தங்களை ஒப்புக் கொடுத்து ஊழியம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை.

அருமையானவர்களே!, இந்த உலகின் காரியங்கள் அனைத்தும் இந்த உலகோடு முடிந்து போகக் கூடியவைகள். நம்முடைய பிள்ளைகள் ஆவிக்குரிய முறையில் தேர்ச்சி பெற அவர்களுக்கு வசனம், ஜெபம் இவைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் தான் ஆவிக்குரிய ரீதியில் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறும்போது, **"நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச் சேவகனாய் தீங்கநுபவி"** என்கிறார். நாமும் நம்முடைய பிள்ளைகள் தேவனுக்காக பாடுபடுவதற்கு, பழக்கப்படுத்த வேண்டும்.

பிள்ளைகள் கர்த்தருடைய பணி செய்ய முழுமனதோடு அர்ப்பணிக்க வேண்டும். இதை வாசிக்கும் தாய்மார்களே சிந்திப்பீர்களா? சிந்தித்து செயல்பட தேவன் உதவி செய்வாராக! ஆமென்!

**B.B. CHOATE**

## இயேசுவின் அழைப்பு

1. **அன்பும் கரிசனையுமான அழைப்பு :**
   **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே!**

2. **பாரபட்சமற்ற, உலகளாவிய அழைப்பு :**
   **நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்**

3. **வாக்குத்தத்தம் நிறைந்த அழைப்பு :**
   **உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் தருவேன்**

4. **தன்னிலை விளக்க அழைப்பு :**
   **நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன்.**

5. **பயம் நீக்கும் அழைப்பு :**
   **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது.**

வாலிபர் பகுதி

# நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தமா?

**வா**லிப நெஞ்சங்களே! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த வகையில் நம்முடைய தேவன் நம்மை இந்த பூமியில் வைத்திருப்பதன் நோக்கம் நாம் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் (ஏசாயா 43:7) இந்த உலகத்தில் நாம் செய்யும் ஒவ்வொரு கிரியைக்கும் நிச்சயமாகவே நாம் நியாயத்தீர்ப்பின் நாளிலே கணக்கு கொடுக்க வேண்டும். இந்த நியாயத்தீர்ப்பின் நாள் இந்த உலகத்தில் தேவனுக்குப் பிரியமானவை களைச் செய்பவர்களுக்கு ஆசீர்வாதமான நாளாகவும், தேவனுக்கு பிரியமில் லாத காரியங்களைச் செய்பவர்களுக்கு பயங்கரமான நாளாகவும் காணப் படும். இப்போது அந்த நியாயத்தீர்ப்பின் நாளை எப்படி மகிழ்ச்சியின் நாளாக மாற்றுவது என்பது பற்றி சில காரியங்களை வேத வசனத்தின் வெளிச்சத்தில் காண்போம்.

வாலிபர்கள் மத்தியில், நிறைய பணத்தினால் தான் இந்த உலகத்தில் சந்தோஷமாக வாழ முடியும் என்கிற விதையை பிசாசு விதைத்திருக்கிறான். அது முளைத்து செடியாகி, கொடியாகி, மரமாகி வளர்ந்து கனிகளை தந்து கொண்டிருக்கிறது. ஆவியின் கனிகளை தரவேண்டிய வாலிப நெஞ்சங்கள் பிசாசுக்கு இடம் கொடுத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பிசாசுக்கு நம்முடைய எண்ணங்கள் எல்லாம் தெரியாது. நம்முடைய எண்ணங்களை அறியக்கூடியவர், இருதயங்களை ஆராயக்கூடியவர் தேவன் ஒருவரே, ஆனால் பிசாசு, வாலிபர்கள் எந்த பகுதியில் நாட்டமுடையவர்களாய் இருக்கிறார்களோ அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்புகளை அள்ளிக் கொடுப்பான். ஆனால், ஒரு ஆவிக்குரிய வாலிபன் பிசாசுக்கு எதிர்த்து நிற்கிறான், அப்பொழுது அவன் ஓடிப்போகிறான் (யாக்கோபு 4:7).

நாம் வேதாகமத்தில் பார்க்கும்போது இந்த உலகத்தில் நாம் செய்த செயல்களுக்காக நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும் என்கின்ற உண்மையை விட தெளிவாக எந்த ஒரு உண்மையும் வேதாகமத்தில் போதிக்கப்படவில்லை (2கொரிந்தியர் 5:10). ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். ஆனால் இன்றைய நாட்களில் அநேகர் வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்த்தால் நியாயத்தீர்ப்பு என்று ஒன்றுமே இல்லை, நாம் யாருக்கும் பதில் கொடுக்க வேண்டியதில்லை என்ற ஒரு முடிவுக்கு வந்து விட்டது போல் தெரிகிறது (பிரசங்கி 11:9ல் சாலொமோன் ஞானி சொல்லும் போது வாலிபனே உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை எல்லா

வற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி என்று சொல்கிறார். இந்த உலகத்திலே எத்தனையோ நிகழ்வுகள் இருந்தாலும் நியாயத்தீர்ப்பு நாளைப் போல பயங்கரமான நாள் ஒன்றும் இல்லை. அந்த நாளை மனதில் கொண்டவர்களாய் நாம் இந்த உலகத்தில் வாழும் போது தீமையை விட்டு விலகி கர்த்தருக்கு பிரியமான காரியங்களைச் செய்வோம். அப்போது நாம் அந்த நாளைக் குறித்து பயப்படாமல் சந்தோஷமான அந்த நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப் போம். நாம் வாழும் இந்த உலகத்தில் வேதத்தின்படி நடக்கவில்லை யென்றால் நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும். நாம் வாழும் இந்த உலகமானது நம்முடைய நித்தியத்தைத் தெரிந்தெடுப்பதற்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் நாம் நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்பது என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுக்கப் படமாட்டாது. இப்போது வேதாகமத்திலிருந்து நாம் எதையாவது செய்யத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நின்று பதில் அளிக்க வேண்டும் என்று வேத வசனங்களின் துணை கொண்டு பார்ப்போம்.

## I தேவனுடைய வசனங்களை அறியாதிருந்தால்

ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தை களை நாம் கற்றுக் கொள்ளத் தவறினால் நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? வேதாகமானது மனிதனுக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். வேதாகமம் தெய்வீக இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்துகிறது (எபேசியர் 3:1-3). நீங்கள் தேவனுடைய சத்தியத்தின் அறியாமையிலே மரித்து நித்தியமாக இரட்சிக்கப்பட முடியாது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:32). அந்தக் கடைசி மகாபெரிய நாளில் தேவனுடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும் (யோவான் 12:48). நம்முடைய நாட்களில் வேத வசனங்கள் பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, இணையதளம் மூலமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனவே நாங்கள் வேத வசனங்களை கேட்டதே இல்லை என்று யாரும் சாக்கு போக்கு சொல்ல முடியாது. அப்படியே வேத வசனங்களைக் கேட்டிராவிட்டாலும், தேவனுடைய சிருஷ்டிப்புகளைப் பார்த்து இவைகளையெல்லாம் வடிவமைத் தவர், உருவாக்கியவர் ஒருவர் இருக்கிறார் என்று அவர்கள் முடிவுக்கு வர வேண்டும். அவர்களுக்கும் போக்குச் சொல்ல இடமில்லை.

நம்மை நாம் தேவனுக்கு முன்பாக உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிருக்க வேத வசனங்களை நாம் படிக்க வேண்டும் (2தீமோத் தேயு 2:15). அதேபோல் நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டால், தவறாக நடத்தப்பட்டால், நியாயத்தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? நாம் கள்ளப் போதகர்களால் வஞ்சிக் கப்படுவதைக் குறித்து இயேசு எச்சரித்தார் (மத்தேயு 7:15-20). மேலும் இயேசு குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே என்று எச்சரித்தார் (மத்தேயு 15:14).

அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய வாசகர் களுக்கு எழுதும் போது, "பிரியமானவர்களே உலகத்தில் அநேகங் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித் தறியுங்கள்" (1 யோவான் 4:1).

## II கிறிஸ்துவுக்குள் இல்லாதிருந்தால்

சத்தியத்திற்கு கீழ்ப்படிய வாய்ப்புக்கு மேல் வாய்ப்பு இருந்தும் அதைத்தள்ளி கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் போது நியாயத் தீர்ப்பு நாளிலே தேவனுக்கு முன்பாக நம்முடைய பதில் என்னவாயிருக்கும்? (ரோமர் 2:8,9). (எபிரெயர் 2:1-3). கிறிஸ்துவுக்குள்ளாக இருப்பது மிக முக்கியமானது. ஒரு மனிதன் பெரிய வீட்டுக்குள் இருப்பது, அதிக ஆஸ்தி களுடன் இருப்பது, பெரிய அலுவலகத்தில் இருப்பது எல்லாம் இரட்சிப் புக்கும், நித்திய ஜீவனுக்கு உதவாது. ஆனால், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பது மிக முக்கியமானது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் தான் கிறிஸ்துவும் அவனுக்குள் இருப்பார். அதுமாத்திரமல்ல கிறிஸ்துவுக்குள் தான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களும் இருக்கின்றன (எபேசியர் 1:3).

சரி, நாம் கிறிஸ்துவுக்குள் இருக்க என்ன செய்ய வேண்டும்? கிறிஸ்துவுக்குள் எப்படி இருப்பது பற்றி புதிய ஏற்பாட்டில் மிகவும் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது ரோமர் 6:3,4 கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு அவருடைய மரணத் திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.

மேற்கூறப்பட்ட வசனத்தில் நாம் பார்த்தபடி ஒருவன் ஞானஸ்நானத்தி னாலே தான் கிறிஸ்துவுக்குள் இருக்க முடியும். புதிய ஏற்பாட்டில் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கும், இரட்சிப்படைவதற்கும் இதைத் தவிர வேறு வழிகள் வெளிப்படுத்தப்படவில்லை. நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம். நாம் எல்லோரும் கிறிஸ்துவின் குணாதிசயங்களைப் பெற்றிருந்தால் உலகத்திலே சண்டைகளோ, சச்சர வுகளே இராது, இந்த உலகம் ஒரு வித்தியாசமான உலகமாயிருக்கும் நாம் 2 கொரிந்தியர் 5:17ல் வாசிக்கும் போது "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்று வாசிக்கிறோம். பிரியமான வாலிப நெஞ்சங்களே இதுவரை நாம் இந்த உலகப்பிரகாரமான காரியங்களில் நம்மை மூழ்கடித் திருந்தாலும் பரவாயில்லை, இனிமேல் நாம் கிறிஸ்துவுக்குள் இருந்து ஒரு புதிய மனிதனாக வாழ்ந்து, அநேகரை நீதிக்குட்படுத்தி நட்சத்திரங்களைப் போல் பிரகாசிப்போம், தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமென்!

*பென்னி மார்ட்டின்*

சிறுவர் பகுதி

# "இயேசுவின் இளமைப் பருவம்"



இயேசு குழந்தையாய் இருந்த போது மரியாளும், யோசேப்பும், துன்மார்க்கனான ஏரோது மன்னனிடமிருந்து குழந்தையை காப்பாற்றிக் கொள்ள எகிப்திற்கு எடுத்துச் சென்றார்கள். தேவன் அவர்களை பாலஸ்தீனத்திற்கு திரும்பி போகச் சொன்னபோது, கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் பட்டணத்திற்கு வந்தார்கள். இயேசு வளர்ந்து கொண்டிருக்கும் போது யோசேப்பு இயேசுவுக்கு தச்சு வேலை கற்றுக் கொடுத்தார். தன் தகப்பனுடைய வேலையை (தொழிலை) மகன் தொடர்ந்து செய்வது அன்றைய வழக்கமாயிருந்து.

பெரும்பாலான யூதர்கள் செய்கிறபடி மரியாளும், யோசேப்பும் பஸ்கா பண்டிகையை அனுசரிக்க ஒவ்வொரு வருடமும் எருசலேமுக்குச் சென்றார்கள். ஒரு வருடம் இயேசு தனக்கு 12 வயதாய் இருக்கும் போது பண்டிகை முடிந்து எருசலேமிலேயே இருந்துவிட்டார். ஜனக் கூட்டத்தோடு பயணித்ததால் மரியாளும், யோசேப்பும் ஒரு நாள் பிரயாணம் முடியும் வரை இயேசு தங்களோடு இல்லை என்பதை கண்டு பிடிக்காமல் இருந்தனர். மூன்று நாளைக்கு பின்பு அவர்கள் இயேசுவை எருசலேமில் தேவாலயத்தில் கண்டுபிடித்தார்கள். அவர் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். இயேசுவின் பேச்சைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையும் குறித்துப் பிரமித்தார்கள்.

யோசேப்பும், மரியாளும், ஆச்சரியப்பட்டு ஏன் இவர் தங்களோடு வரவில்லை என்று சிந்தித்தார்கள். இயேசு தன் பெற்றோரை நோக்கி, "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்?" என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா? என்று கேட்டார்.

இயேசு தன் பெற்றோருக்கு கீழ்ப் படியாமலோ, மதிக்காமலோ இல்லை. தான் தேவனுடைய குமாரன், பெரிய காரியங்களுக்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை மாத்திரம் அவர்கள் உணரும்படி இவ்வாறு கூறினார். லூக்கா 2:52ல் நாம் வாசிக்கிறோம், **இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்** என்று.

இதை வாசிக்கும் அன்பு தம்பிகளே, தங்கைகளே! இயேசுவை பற்றி படித்தீர்களா? உங்களைப் போல் சின்ன பையனாக இருக்கும் போதே, தன் தகப்பனுக்காக வேலை செய்து, பிறருக்கு தேவனைப்பற்றி சொல்ல வேண்டும் என்பதை அறிந்திருந்தார். செய்தார். நாமும் கூட நம் இருதயத்தில் அதே நோக்கத்தைக் கொண்டு இயேசுவைப் போல் வளருவோமாக.

**இம்மாதத்திற்கான மனப்பாட வசனம் லூக்கா 2:52**

**R.A.R. நாயகம்**

## நாளும் நடப்பும்

1. என்.எல்.சி ஒப்பந்தத் தொழிலாளர்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம்.
2. மீனவர்கள் மீது தாக்குதலை நிறுத்தக்கோரி பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் கருணாநிதி கடிதம்.
3. ஒரிசாவில் கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து மாநில மெங்கும் பல இடங்களில் பேரணி.
4. இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய கவர்னராக சுப்பாராவ் நியமனம்.
5. பி.எஸ்.என்.எல் தொலைபேசியில் குறைந்த மாத வாடகை திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.
6. ஆரம்பப் பள்ளிகளில் அறிமுகம் செய்யப்பட்ட “ஏபிஎல்” திட்டத்தை கைவிடக்கோரி போராட்டம்.
7. தமிழக பட்ஜெட்டில் மகளிருக்கு 30% நிதி ஒதுக்கீடு செய்ய கோரிக்கை.
8. பேநசீர் கணவர் சர்தாரி பாகிஸ்தான் அதிபரானார்.
9. அசாமில் பயங்கர வெள்ளம் : 12 லட்சம் மக்கள் பாதிப்பு.
10. ரோஜர் பெடரர் ஐந்தாவது முறையாக அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றார்.

# மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே

ராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தினாலே வாழ்த்துக்கள். நம்முடைய ஒவ்வொரு வீடுகளிலும் சில பிரச்சனைகள் ஏற்படுகின்ற போது அநேக வேளைகளில் நாமே சமரசம் செய்து கொள்வோம். ஒருவேளை மகன் தவறு செய்து தகப்பன் அவனைக் கண்டிக்கின்ற போது தாய் வந்து அவனுக்காக பரிந்து பேசுவதை நாம் பார்த்திருப்போம். அப்படிப்பட்ட அனுபவங்கள் நமக்கும் ஏற்பட்டதுண்டு. இப்படி குடும்ப உறவுக்குள் உள்ளவர்களே ஒருவருக்கொருவர் பரிந்து பேசிக்கொள்வார்கள், சரி, இந்த "பரிந்து பேசுதல்" என்பது ஒரு மனிதன் பிரச்சனைக்குள் இருக்கின்ற போது அவனையே வெளியே கொண்டு வருவதற்கு பிரச்சனையில் பாதிக்கப்படாத ஒருவரின் போராட்டமே "பரிந்து பேசுதல்" என்பதாக கூட எடுத்துக்கொள்ளலாம். இப்படி பரிந்து பேசக்கூடிய ஒரு உண்மையான மத்தியஸ்தன் இருக்கும் பொழுது நிச்சயமாக நாம் பிரச்சனையிலிருந்து மீண்டு வெளியே வர முடியும்.

பொறுமைக்கு தகப்பனாயிருக்கக் கூடிய யோபு பிசாசினால் சோதிக்கப் பட்ட போது வாடி வதங்கிப்போன சூழ்நிலையில் "நான் அவருக்குப் பிரதி யுத்திரம் சொல்லுகிறதற்கும் நாங்கள் கூடி நியாயத்திற்கு வருகிறதற்கும் அவர் என்னைப் போல மனுஷன் அல்லவே எங்கள் இருவர் மேலும் தன் கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள் இல்லையே" (யோபு 9:32,33) என்று புலம்பினான் அதாவது எனக்காக தேவனிடத்தில் பரிந்து பேசக்கூடிய மத்தியஸ்தன் இல்லையே என்று புலம்பி இருக்கிறார்.

ஆனால் அதற்கு பின்பு நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் பரிந்து பேசுகிற விசயத்தில் சில மத்தியஸ்தர்கள் எழும்பி இருப்பதை நாம் காண முடியும். அதைக் குறித்து இக்கட்டுரையின் வாயிலாக கற்றுக்கொள்வோம். நம்முடைய வேதாகமத்தை மூன்று காலங்களாக நாம் பிரித்து வைக்க முடியும் முதல் காலம் "முற்பிதாக்களின் காலம்", இரண்டாம் காலம், "நியாயப் பிரமாணத்தின் காலம்", மூன்றாவது காலம், "கிருபையின் காலம்" இந்த மூன்று காலத்திலும் மத்தியஸ்தர்கள் எழும்பி பரிந்து பேசி இருக்கிறார்கள் அதைக் குறித்து சற்று விரிவாக ஆராய்ந்து பார்ப்போம்.

**முற்பிதாக்களின் காலத்தில் - ஆபிரகாம்**

விசுவாசத்திற்கு தகப்பனும் வேராக இருந்த ஆபிரகாம் குறித்து நாம் நன்றாக அறிந்து இருக்கிறோம். தேவன் அவனை அழைத்து நான் காண்பிக் கின்ற தேசத்துக்கு போ என்று சொன்னபோது அவன் கீழ்ப்படிந்து புறப்பட்டுப் போனான், போகும் போது அவன் இனத்தானாகிய லோத்துவையும் கூட்டிக் கொண்டு போனான், பின்பு சில வருடங்களில் இருவரும் ஐசுவரியவான் களாக இருந்த நேரத்தில் ஆபிரகாமின் மந்தை மேய்ப்பருக்கும் லோத்துவின் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதம் முற்றி கைகளப்பில் இறங்க, ஆபிரகாம் தடுத்து நாம் சகோதரர்கள் என்று சொல்லி லோத்தை நோக்கி நீ இடது புறம்

போனால் நான் வலது புறம் போகிறேன் (ஆதி. 13:9) என்று கூறினான். லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து யோர்தானுக்கு அருகாமையில் இருந்த சோதோம் கொமொராவை தேர்ந்து எடுத்து தன் குடும்பத்தாரையும் தன் மந்தைகளையும் நடத்திக் கொண்டு சோதோமில் குடியேறினான்.

லோத்து சோதோமின் பார்த்தானே ஒழிய அதிலிருந்து ஜனங்களை பார்க்கவில்லை. ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் தமது வசனத்தில் சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள் (ஆதி 13:13) என்று வெளிப்படுத்தியிருக்கிறார். பின்பு அந்த ஜனங்களின் பாவம் தேவ சந்நிதியை எட்டியது (ஆதி. 18:20,21) ஆகையால், இந்த பட்டணத்தை நிலவரங்களை அறிந்து அழிக்க தேவ தூதர்களும், கர்த்தரும் இறங்கி ஆபிரகாம் கூடாரத்திற்கு வந்தார்கள்.

ஆபிரகாம் அவர்களை உபசரித்த பின்பு கர்த்தர் சோதோமை அழிக்கப் போகிறேன் என்று சொன்னபோது ஆபிரகாம் அதிர்ந்து போனான் ஏனென்றால், தன்னுடைய ரத்த சொந்தமாகிய லோத்து அந்தப் பட்டணத்தில் குடியிருக்கிறானே அவனும் அவனுடைய குடும்பமும் சேர்ந்து அழிந்து போகுமே என்று ஆதங்கப்பட்டவனாக லோத்துவுக்கும் தேவனுக்கும் ஒரு மத்தியஸ்தனாக இருந்து லோத்துவுக்காக பரிந்து பேசினான்.

ஆபிரகாம் தேவனை நோக்கி "சோதோமிலே ஐம்பது நீதிமான்களை கண்டால் அழிப்பீரா என்று தாழ்மையோடு கேட்க, நம்முடைய இரக்கமுள்ள கர்த்தர் ஐம்பது நீதிமான்களை அந்தப் பட்டணத்தில் கண்டால் அழிக்க மாட்டேன்" (ஆதி. 18:29,40) என்றார். பின்பு ஆபிரகாம் 45,40, 30, 20 என்று நீதிமான்களின் எண்ணிக்கையை குறைத்து கடைசியில் பத்து நீதிமான்களினி மித்தம் அந்த பட்டணத்தை அழிப்பீரோ என்று கேட்க அவர் அழிக்கமாட்டேன் என்று கூறிவிட்டு எழுந்து போய் விடுகிறார்.

பின்பு ஆபிரகாமினிமித்தமாகவும் லோத்து நீதிமானாக வாழ்ந்ததினி மித்தமாகவும் தேவ தூதர்கள் லோத்தின் குடும்பத்தை தப்பவிட்டு சோதோம் கொமொராவை அக்கினியினால் அழித்து போட்டார்கள். பிரியமானவர்களே ஆபிரகாம் நீதிமானாயிருந்த தன் சொந்தமாகிய லோத்துக்காக தேவனிடத்தில் பரிந்து பேசினான் அதுபோல நாமும் நம்முடைய இனத்தாரின் இரட்சிப்புக் காக தேவனிடத்தில் ஜெபத்திலே பரிந்து பேசக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

**நியாயப்பிரமாணத்தின் காலத்தில் - மோசே**

எகிப்தில் அடிமைப்பட்டு இருந்த இஸ்ரவேல் ஜனங்களின் விடுதலைக்கு தேவன் சாந்த குணத்தின் தகப்பனாயிருக்கிற மோசேயை அனுப்பினார். மோசே அவர்களை விடுதலை செய்து செங்கடலைக் கடந்து சீனாய் மலையின் வனாந்தரத்தில் இளைப்பாற வைத்து விட்டு, தேவ பிரமாணத்தை வாங்க மலைக்கு ஏறிப்போனான். தேவன் அங்கு மோசேயிடம் பிரமாணத் தைக் கொடுத்துக் கொண்டு இருக்கும் போது, கீழே ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம், ஆதலால் நீர் எழுந்து

எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும் (யாத். 32:1) என்று இஸ்ரவேல் ஜனங்கள் ஆரோனுக்கு கட்டளையிட அவனும் பவ்வியமாய் செம்மறி ஆட்டைப் போல தலையாட்டிக் கொண்டே அவர்கள் கொடுத்த பொன்னை வைத்து அழகான கன்றுக்குட்டியை உருவாக்கிக் கொடுத்தான். அதை வைத்து பண்டிகையையும் கொண்டாடி னார்கள் (யாத். 32:4,6).

இதனால் கோபமுற்ற நம்முடைய தேவன் மோசேயை நோக்கி, நீ அழைத்துக் கொண்டு வந்த ஜனங்கள் தங்களை கெடுத்துக் கொண்டார்கள் (யாத். 32:7,8) என்றார். மேலும் அவர் மோசேயை நோக்கி; நான் இவர்களை அழிந்து போடவும் நீ என்னை விட்டுவிடு நான் உன்னை பெரிய ஜாதியாக்கு வேன் (யாத். 32:9,10) என்று கூறினார். இதைக் கேட்ட மோசே தேவனுக்கும் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மத்தியஸ்தனாக பரிந்து பேசினான் அவன் தேவனை நோக்கி ..... உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது ஜனங்களுக்குத் தீங்கு செய்யாதபடிக்கு அவர்கள் மேல் பரிதாபங் கொள்ளும், உமது தாசராகிய ஆபிரகாமையும், ஈசாக்கையும், இஸ்ரவேலை யும் நினைத்தருளும், உங்கள் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போல பெருகப்பண்ணி, நான் சொன்ன இந்த தேசம் முழுவதையும் உங்கள் சந்ததியார் என்றைக்கும் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு, அவர்களுக்கு கொடுப்பேன் என்று உம்மைக் கொண்டே அவர்களுக்கு ஆணையிட்டுச் சொன்னீரே என்று கெஞ்சிப் பிரார்த் தித்தான் (யாத். 32:13) அதோடு மாத்திரமல்ல மோசே தேவனை நோக்கி தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும், இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப் போடும் என்றான் (யாத் 32:32). இதைக் கேட்ட தேவன் அந்த ஜனங்களை அழிக்காமல் பரிதாபங் கொண்டார் (யாத். 32:14) என்று வசனம் சொல்லுகிறது.

மோசே அந்த இஸ்ரவேல் ஜனங்களுக்காக தேவனிடத்தின் திறப்பின் வாசலிலே நின்று மத்தியஸ்தனாக பரிந்து பேசினான். தேவன் அவனுடைய வார்த்தையை கேட்டு, அந்த ஜனங்களின் மீது இரக்கம் வைத்தார். நாமும் மோசேயைப் போல நம் தேசத்திலுள்ள ஜனங்களின் இரட்சிப்புக்காக நாம் தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாக பரிந்து பேச வேண்டும்.

**கிருபையின் காலத்தில் - கிறிஸ்து**

“இயேசு கிறிஸ்து” என்ற இந்த வார்த்தையை கேட்கின்ற போது ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவர்களுக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படுவது உண்டு. ஏனென்றால், அவருடைய தியாகம் அப்படிப் பட்டது, அவர் இந்த உலகத்தில் வாழக்கூடிய ஒவ்வொரு மனிதனுக்கும் தம்முடைய இரத்தத்தைக் கொடுத்து, பாவமன்னிப்பை அளித்து இரட்சிப்பின் அதிபதியாக இருக்கிறார். அதோடு மாத்திரமல்ல இந்த பூமியிலே தம்முடைய இராஜ்ஜியமாகிய சபையை ஸ்தாபித்து இருக்கிறார். அவரை ஏற்றுக் கொண்டு பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெறுகின்ற போது ஒவ்வொருவரையும் தம்முடைய சரீரமாகிய சபையிலே சேர்க்கிறார் (அப். 2:37-47) இன்றைக்கு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

அங்கே இயேசு கிறிஸ்து என்ன செய்து கொண்டு இருக்கிறார் என்பதை பரிசுத்த ஆவியானவர் பவுலைக் கொண்டு சொல்லும் போது தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம 8:34) என்று விளம்பி இருக்கிறார். மேலும் பரிசுத்த ஆவியானவர் "..... ஒருவன் பாவஞ் செய்வானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்" (1யோவான் 2:1) என்கிறார்.

பிரியமானவர்களே இந்த வசனத்தை வாசிக்கும் போது நமக்கு எவ்வளவு ஆறுதல் கிடைக்கிறது. நம்முடைய இரட்சகர் நம்முடைய மத்தியஸ்தராக (1தீமோ 2:5,6) இருந்து நமக்காக பிதாவினிடத்தில் நேரடியாகப் பரிந்து பேசுகிறார், ஆபிரகாம், மோசே போன்ற தாசர்கள் பூமியிலிருந்து ஒரு கூட்ட ஜனத்திற்காக பரிந்து பேசினார்கள், ஆனால், நம்முடைய மீட்பரோ பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காக பரிந்து பேசிக்கொண்டு இருக்கிறார், நாம் எவ்வளவு பெரிய பாக்கியவான்கள் பாருங்கள். இந்த சிலாக்கியம் வேறு யாருக்கு கிடைக்கும் நிச்சயமாக அவர் ஸ்தாபித்த மெய்யான கிறிஸ்துவின் சபையில் அங்கமில்லாத யாருக்குமே கிடைக்காது. அவர் நமக்காக பரிந்து பேசுவதினாலே தேவன் நம்முடைய பாவங்களையெல்லாம் கிருபையாய் மன்னித்து நம்மை நிச்சயம் பரலோகத்திற்கு சொந்தமாக்குவார். ஆமென்.

**N. பர்னபாஸ், திருப்பூர்.**

## நாம் எதற்காக யாருக்காக ஜெபிக்க வேண்டும்?

1. *நாட்டுத் தலைவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (1தீமோத் 2:2)*
2. *வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 5:14,15)*
3. *நம்முடைய ஆகாரத்திற்காக ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 6:11)*
4. *நம்முடைய சத்துருக்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (மத்தேயு 5:44)*
5. *இழந்து போனவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் (ரோமர் 10:1)*
6. *நாம் எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்க வேண்டும் (1தீமோத்தேயு 2:1,2)*

# 5 நிமிட வேத வகுப்பு

## கண்டுபிடியுங்கள்

### "ஆண்டவரே"என்று சொன்னவர்கள் யார்?

1. யோவான் 6:6:8 - "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே"
2. யோவான் 11:27 - "ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றார்
3. யோவான் 13:37 - "ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக்கூடாது? உம்க்காக என் ஜீவனையும் கொடுப்பேன்" என்றான்.
4. யோவான் 14:5 - "ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே வழியை நாங்கள் எப்படி அறிவோம்" என்றார்
5. யோவான் 14:8 - "ஆண்டவரே, பிதாவை எங்களுக்கு காண்பியும், அது எங்களுக்குப் போதும்" என்றான்
6. யோவான் 14:22 - "ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போகிற காரணமென்ன என்றான்"
7. யோவான் 20:28 - "என் ஆண்டவரே, என் தேவனே" என்றான்
8. யோவான் 21:15 - "ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான்.

*பவுலா பேட்ஸ்* **PAULA BATES**

**பதில்கள்**

1. தோமா
2. பிலிப்
3. பேதுரு
4. மார்த்தாள்
5. பேதுரு
6. ஸ்காரியோத்தல்லாத யூதாஸ்
7. தோமா
8. பேதுரு

# தேவனை எது அழச் செய்கிறது?

மரணம் பற்றி நம் எல்லோருக்குமே பரிச்சயம் உண்டு. நமக்கு நெருக்கமானவர்கள், அன்பானவர்கள் மரிக்கும் போது உண்டாகும் துயரம், துக்கம் நாம் அறிந்ததே. நம்முடைய துக்கத்தில் தேவன் கரிசனை உள்ளவராக இருக்கிறார் என்பதை நாம் ஒரு போதும் மறக்கக்கூடாது. யோவான் 11:35-ல் "இயேசு கண்ணீர் விட்டார்" என்று புதிய ஏற்பாட்டின் மிகச் சிறிய வசனத்தை நாம் பார்க்கலாம். மூன்று வார்த்தைகள் மாத்திரம் இருந்தாலும், ஆழந்த அர்த்தம் இதில் அடங்கியிருக்கிறது.

இந்த ஒரு வசனம், கர்த்தராகிய இயேசுவின் மனுஷீகத்தை மென்மை யான வழியில் காட்டுகிறது. இன்னும் கொஞ்ச நேரத்தில் மரித்துப் போன லாசரு உயிரோடு எழுந்திருப்பான் என்று நன்கு தெரிந்தாலும், ஏன் இயேசு அழுதார் என்று சில நேரங்களில் நாம் எண்ணுகிறோம். தான் நேசிப்பவர் களின் துயரத்தைக் கண்ட போது, மாம்சத்தில் வந்த இயேசு இரக்க குணம் கொண்டவராய் அழுதுள்ளார். இது, ஒரு மனிதன் எவ்வளவு பாடுகள் பட்டு, பலவீனமுள்ளவனானாலும் அதினிமித்தம் தொடப்படாத அஞ்ஞானிகள் வணங்கும் தெய்வங்களின் தன்மைக்கு எதிரானதாக இருக்கிறது. ஒருவேளை இத்தெய்வங்கள் தங்களுக்காக அழக்கூடும், ஆனால், ஒருபோதும் மனிதர்கள் பலர் இரக்கம் கொண்டு அழுவதில்லை. ஆனால், நாம் படித்த இந்த வசனம், நம்முடைய தேவன், நமக்கு மிகப்பெரிய துயரங்கள் வந்தாலும் கூட நம்மீது அக்கறையுள்ளவராக இருக்கிறார் என்பதை நினைவுபடுத்த வேண்டும்.

இப்பகுதியிலிருந்து, மிக முக்கியமான ஒன்றை நாம் தெரிந்து கொள்வது அவசியம். பொதுவாக, ஒரு மனிதன் அனுபவிக்கும் மிகப்பெரிய இழப்பு அல்லது துக்கம், நாம் நேசிக்கும் ஒருவரை மரணத்தின் மூலம் இழப்பது தான் என்று நினைக்கிறோம். மரித்துப்போன லாசருக்காக, மார்த்தாள், மரியாள் ஏன் இயேசு போன்றவர்கள் அழுதது போல, சரீர இழப்பின் போது நாம் துக்கப்படுவதில் எந்தத் தவறும் இல்லை அது நியாயமானதே.

லாசரு மரித்த போது இயேசு ஆண்டவர் அழுததற்குப் பயன்படுத்தப் பட்டிருக்கும் கிரேக்க வார்த்தை, பொதுவான அழுகைக்குப் பயன்படுத்தப் பட்ட வார்த்தையல்ல. இயேசு கண்ணீர் விட்டார் என்றே உள்ளது. பொதுவாக, ஒரு மரணத்தோடு சம்பந்தப்பட்ட கூச்சலோடு கூடிய அழுகை அல்ல அது.

சத்தமிட்டு, தேம்பி அழுவதற்கு, கிரேக்கத்தில் வேறொரு வார்த்தை உண்டு. இவ்வார்த்தை கர்த்தர் சம்பந்தமாக ஒருமுறை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. "அவர் சமீபமாய் வந்த போது, நகரத்தைப் பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுதார்" (லூக் 19:41).

இந்த சந்தர்ப்பத்தில், இயேசு ஒலிவ மலையிலிருந்து கீழே இறங்கி வந்து கொண்டிருந்தார். அப்படி வரும்போது, ஒட்டுமொத்த எருசலேம் நகரமும் மிக நன்றாகத் தெரியும். இந்த பட்டணத்திற்கு என்ன நேரிடும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இப்படிப்பட்ட துயரமான

ஓர் அழிவு எருசலேம் பட்டணத்திற்கு அவசியமில்லையென்பதும் நன்றாகத் தெரியும். யூதர்கள், பிடிவாதமாக மறுக்காமல், இயேசுவிடமும் அதன் மூலம் தேவனிடமும் திரும்பியிருந்தால், அவர்கள் இரட்சிப்படைந்திருக்கு முடியும். இயேசு இந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கும் போது கூட, யூத மதத் தலைவர்கள், ஜனங்களுடைய கோபத்திற்கு ஆளாகாமல், இயேசுவைக் கொலை செய்வதற்கான வழியைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

இது குறித்து, வில்லியம் பார்க்லே என்பவர் இவ்விதமாக விளக்கு கிறார். "ஜனங்கள், தேவ சித்தத்திற்கு எதிராக கலகம் செய்ததால், தங்களுக்குத் தாங்களே தேடிக் கொண்ட தேவையே இல்லாத வேதனை, பாடுகளைக் கண்ட போது, இயேசு விட்ட கண்ணீர், தேவன் விட்ட கண்ணீர்" என்று. இங்கே, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய கருத்து, மனிதன் படும் எவ்வித துக்கம் குறித்து தேவன் அக்கறைப்படுவது உண்மையாக இருந்தாலும், அதே மனிதன் ஆவிக்குரிய இழப்பையும், அதினிமித்தம் தேவையில்லாத பாடு களையும் பட நேரும்போது, தேவன் மிக அதிகமாக துக்கப்படுகிறார்.

மத்தேயு ஆசிரியர், இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும், படம் காட்டி விளக்குவது போன்ற மொழி நடை எனக்கு மிகவும் பிடித்த மான ஒன்று "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவர்களே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக் கொள்ளும் வண்ண மாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று" (மத் 27:37).

ஆவிக்குரிய ரீதியில் கறைபடுத்தப்பட்டு, பாவ நிலையிலிருந்த எருச லேமைப் பார்த்து இயேசு கூறின வார்த்தைகளால், அவர் கன்னத்தில் வழிந்த கண்ணீரையும், சத்தத்தில் மறைந்திருந்த வலியையும் நம்மால் காணவும், கேட்கவும் முடிகிறது.

மனிதனுடைய மிகப் பெரிய இழப்பு, சரீரப்பிரகாரமான மரணமோ அல்லது அழிவோ அல்ல, மாறாக ஆத்தும இழப்பும், அழிவும் தான். இப்படிப் பட்ட அழிவைத் தடுப்பதற்காக இயேசு தம்முடைய குமாரனை அனுப்பினார். ஆனால், மனிதன், வெகு காலத்துக்கு முன்பு இருந்த எருசலேம் பட்டணத்தார் போன்றே இருக்கிறான். அவர்களால், இரட்சிப்படைய முடியும். ஆனால், மனமற்றவர்களாக இருக்கிறார்கள்.

நாம் நம்முடைய குடும்பத்தில் ஒருவரை இழக்கும் போதோ அல்லது நம்முடைய சொத்து சுகங்களை இழக்கும் போதோ துக்கப்படுகிறோம். **அதே சமயம், நம்முடைய ஆத்துமா ஆக்கினைக்குள்ளாக்கப்படுவது குறித்து கவலையற்றிருக்கிறோம்.** ஆத்தும இழப்பென்பது, எவ்வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல், நம்மாலே நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு தேவனை துக்கப்படுத்துகிறது. இந்த ஆத்தும அழிவு, தேவையில்லாமல், அதாவது, தப்பிக்கொள்ளும் வாய்ப்பிருந்தும் நேரிடும் போது, துக்கம் இன்னும் அதிகமாகிறது. மனிதன், தனக்காக மரித்த இயேசுவிடமும், அவர் கொடுத்த புதிய ஏற்பாட்டு வார்த்தைகளிடமும் திரும்பிவிட்டால், இந்த ஆத்தும அழிவு அவனுக்கு நேரிட வேண்டிய அவசியமில்லை. கிறிஸ்து வுக்குக் கீழ்ப்படிய நீங்கள் இன்று தீர்மானிக்க மாட்டீர்களா?.

**ஜெர்ரி பேட்ஸ்** **JERRY BATES**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம், சபை வரலாறு என்கின்ற பாடத்தை நாம் தொடர்ந்து படித்தோம். இயேசுவின் ஒன்றான மெய் சபையிலிருந்து விழுந்து போனவர்கள் ரோமக்கத்தோலிக்க சபையை நிறுவினார்கள் என்று கற்றுக் கொண்டோம். அதன் பிறகு தைரியசாலிகளான மார்ட்டின் லூதர், சுவிங்க்லி போன்றோர்கள் 1400 மற்றும் 1500 ஆம் ஆண்டுகளில் அந்த சபையை சீர்திருத்த அநேக முயற்சிகளை எடுத்தனர்.

பல நூறு வருடங்களுக்குப் பிறகு, இன்னும் சில தைரியமான மனிதர்கள் இதைவிட அதிகமான முயற்சிகளை எடுத்து இந்த தவறான கத்தோலிக்க சபையை சீர்திருத்துவதற்கு முயற்சி செய்தனர் இவர்களுடைய ஆசை எல்லாம் தேவன், இயேசுவின் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தி யிருக்கிற தூய, எளிய கிறிஸ்தவத்தை மீட்டமைப்பதாக இருந்தது. அவர்கள் புரோடஸ்டன்ட் சபையிலோ, ரோமக் கத்தோலிக்க சபையிலோ இருக்க விரும்பவில்லை. அவர்கள் கிறிஸ்தவர்களாயிருக்கவே விரும்பினார்கள்! அவர்களுடைய குறிக்கோள் எல்லாம் இன்று மத உலகில் நாம் காணும் நூற்றுக்கணக்கான சபைகளை மனிதர்கள் உருவாக்குவதற்கு முன்பு தேவன் புதிய ஏற்பாட்டு மாதிரியில் விவரித்திருக்கிற சபையை மீட்டமைப்பதாகவே இருந்தது.

இந்த தேவ பயமுள்ள, தேவ அன்புள்ள மனிதர்கள் மனிதர்களால் கட்டப்பட்ட மார்க்கபிரிவினை சபைகளை விட்டு விட்டு கீழ்காணும் காரியங்களுக்காக போராடினார்கள்.

சபையும், நாடும் தனியாக இருக்க வேண்டுமென்று போராடினார்கள்; சுயச்சார்புள்ள, சுய ஆளுகையுள்ள சபைகள் வேண்டுமென்று போராடினார் கள்; தேவன் (1தீமோத்தேயு 3:1-7) மற்றும் தீத்து (1:5-14) போன்ற வசனங்ளில் ஏற்படுத்தியிருக்கிற தகுதியம்சங்களுக்கு உட்படும் மனிதர்கள் ஒவ்வொரு சபையிலும் மூப்பர்களாக நியமிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும், சபையின் ஒவ்வொரு அங்கத்தினரிடமிருந்தும் வாரந்தோறும் காணிக்கை சேகரிக்கப்படவேண்டும்.

வேத வசனங்களில் மாத்திரம் (குறிப்பாக புதிய ஏற்பாட்டில்) ஒருவர் தன்னுடைய பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்று தேவன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் தேவன் குழந்தை ஞானஸ்நானத்தை அங்கீகரிக்க வில்லை. ஆவிக்குரிய பாடல்களைப் பாடும் போது இசைக்கருவிகளை இசைக்கக்கூடாது. சுவிசேஷப் பிரசங்கியாருக்கும், சபை அங்கத்தினர் களுக்கும் இடையில் எந்த வேறுபாடும் இருக்கக்கூடாது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்து மூலமாக தேவன் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக ஆராதனையை ஏறெடுக்க வேண்டும்.

அவர்கள் தங்களை லூத்தரன்களாக, மெதடிஸ்ட்களாக, பிரெஸ்பெட்டிரியன்களாக, அல்லது மனிதனால் உண்டாக்கப்பட்ட வேறு மார்க்கப் பிரிவினை கூட்டமாகவோ நினைக்கவில்லை.

சபையானது கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்து வேத வசனங்களுக்கு கீழ்ப்படிபவர்களை உள்ளடக்கியது.

கீழ்ப்படிதல் என்பது கடந்த கால பாவங்களிலிருந்து பாவ மன்னிப்பைப் பெற முழுக்கு ஞானஸ்நானம் பெறுவதையும் உள்ளடக்கம்.

வேத வசனங்கள் மாத்திரமே அதிகாரம் பெற்றவை, மனிதனுடைய பாரம்பரியமோ, மனிதனுடைய உபதேசமோ அல்ல;

புதிய ஏற்பாடு தான் கிறிஸ்தவர்களுக்கான தேவனுடைய கட்டளை. பிராந்திய சபைக்கு மேலான ஆளுகை அமைப்பு இல்லை. வேறு விதமாகச் சொன்னால் ஒரு மாநிலத்திலோ, பிராந்தியத்திலோ, தேசத்திலோ அல்லது சர்வதேச அளவிலோ உள்ள சபைகளை ஆளுகை செய்ய எந்த மனிதனுக்கோ அல்லது மனித குழுவிற்கோ அதிகாரம் இல்லை.

நாம் பாடங்கள் 2-4ல் படித்தபடி இந்த கருத்துக்கள் ஒவ்வொன்றும் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. பல்வேறு தேசங்களில் உள்ள மனிதர்கள் பல்வேறு காலக்கட்டங்களில் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதையாக படித்து ஒரே முடிவுக்கு வருவது ஆச்சரியமாயிருக்கிறதல்லவா! அதைப்போலவே திறந்த மனதுடனும், திறந்த இருதயத்தோடும் ஜாக்கிரதையாகப் புதிய ஏற்பாட்டை படித்தால் உலக முழுவதிலும் உள்ள மக்கள் ஒரே புரிந்து கொள்ளுதலுக்கு வருவது நம்மைப் பரவசமூட்டுகிறது. ஏனென்றால், அந்த புதிய ஏற்பாட்டில் தான் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இதைத் தான் சரியாக தேவன் இன்று உங்களிடமிருந்தும் என்னிடமிருந்தும் எதிர்பார்க்கிறார். புதிய ஏற்பாட்டில் ஆரோக்கியமான வார்த்தைகளின் மாதிரியை நாம் உறுதியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். நாம் இதை கிறிஸ்துவின் ஒன்றான மெய் சபையை அடையாளப்படுத்தவும், மனிதனால் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கப் பிரிவினை கூட்டங்களிலிருந்தும் வித்தியாசப்படுத்த அப்படிச் செய்ய வேண்டும்.

இந்த வரலாற்றிலிருந்து நாம் என்ன பாடங்களை கற்றுக்கொள்ள முடியும்?

மதப் பிழைகள் எப்போது நுழைந்தது? எப்போது மக்கள் வேதாகமத்தை அதிகாரத்தின் ஒரே அளவுகோலாக நினைப்பதை கைவிட்டார்கள்? மதப்பிழைகள் எப்போது நீங்கத் தொடங்கின? எப்போது ஜனங்கள் வேதாகமத்தை அதிகாரத்தின் அளவுகோலாக எண்ணி வேதாகமத்திற்கு திரும்பினார்கள்?

ஏசாயா 8:20யை வாசியுங்கள் இதில் தேவனுடைய மாபெரும் தீர்க்கதரிசியான ஏசாயா ஜனங்கள் வேதத்திற்கும் சாட்சி ஆகமத்திற்கும் திரும்ப அழைப்பு விடுக்கிறார். வேறு விதமாகச் சொன்னால் ஏசாயா இஸ்ரவேலை ஏற்றுக்கொள்ளத்தக்கதான அதிகாரத்தின் அளவுகோலாகிய தேவனுடைய வார்த்தைக்கு திரும்புங்கள் என்று வழி நடத்துகிறார்.

இன்றும் கூட நீங்களும், நானும் தேவனைப் பிரியப்படுத்த வேண்டு மென்றால் அதையேத்தான் செய்ய வேண்டும். நாம் போதிக்கின்ற, நடைமுறைப்படுத்துகின்ற ஒவ்வொன்றும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டிருக் கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நாம் வேதாகமத்திற்குத் தான் திரும்ப வேண்டும்.

மேலும், ஏசாயா ஒருவர் தேவனுடைய வார்த்தையின்படி பேசா விட்டால் அவரிடத்தில் வெளிச்சம் இல்லை என்று தைரியமாகப் பேசுகிறார். ஏனென்றால், தேவன் தம்முடைய வார்த்தையில் வெளிச்சத்தை வைத்திருக் கிறார், (சங்கீதம் 119:105). ஆனால் நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தை நம்முடைய இருதயங்களில் பிரவேசிக்க அனுமதித்தால் தான் நமக்கு தேவையான அறிவொளியைப் பெற்றுக்கொள்வோம், நாம் உணர்வடைவோம்.

அதாவது நீங்களும், நானும் தேவனுடைய வார்த்தைக்கு புறம்பாக எதையாவது போதித்தால் நாம் அவருடைய வார்த்தையால் உணர்வடைய வில்லை என்று தான் பொருள்படும்.

மத்தேயு 22:29ல் இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த மதத் தலைவர்களை ஏன் கடிந்து கொள்கிறார்? நம்முடைய இரட்சகர் அவர்கள் தப்பான எண்ணங் கொண்டிருந்ததாக கூறினார் ஏன்? அவர்கள் வேத வாக்கியங்களை அறியாதபடியினால் அவர்கள் தப்பான எண்ணங்கொண்டி ருந்தார்கள்.

பிரியமானவர்களே, நீங்களும் நானும் அதே விதமான பாவத்திற்காக குற்றவாளிகளாக முடியும்! வேத வாக்கியங்களில் தேவன் சொல்கிறதை நாம் அறியாத போது பெரிய தவறுகளை செய்கிறோம்! நாம் சபை வரலாற்றைப் படித்த போது புதிய ஏற்பாட்டு மாதிரியிலிருந்து வழி விலகிப்போன மனிதர்களின் பெருந்தவறுகளை பார்த்தோம். அதன் விளைவு என்னவா யிருந்தது? இயேசு ஸ்தாபிக்காத நூற்றுக்கணக்கான சபைகளை மனிதர்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர்!.

அப் 17:11யை வாசியுங்கள் இதில் பெரோயா பட்டணத்து மக்களை இயேசு ஏன் மெச்சினார்? ஏனென்றால் இந்த பட்டணத்து மக்கள் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள். அதே விதமாக, நீங்களும் நானும் மனோவாஞ்சையாய் வேத வசனத்தை ஏற்றுக் கொண்டு காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படி ஆராய்ந்து

பார்த்தால் தான் போதிக்கப்படுகிறவைகள், நடைமுறைப்படுத்தப்படுகிற வைகள் வேத வாக்கியங்களின்படி இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்.

1பேதுரு 4:11ல் தேவனிடத்திலிருந்து ஒரு முக்கியமான கட்டளை விடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டளைக்கு யார் கீழ்ப்படிய வேண்டும்? இந்த வசனத்தில் தேவன் சொல்லுகிற கட்டளைக்கு இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் கீழ்ப்படிய வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கட்டளைப் பெற்றிருக்கிறோம். வேறு விதமாகச் சொன்னால் நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தையை அதோடு ஒன்று கூட்டவோ, குறைக்கவோ செய்யாமல் துல்லியமாகப் பேச வேண்டும். ஒவ்வொரு சபையும் போதிக்கிறவர்கள், பிரசங்கிக்கிறவர்கள் தேவனுடைய தூய்மை யான, வல்லமையான வார்த்தையை மாத்திரம் போதிக்கும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். தூய்மையான புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டு மனிதர்கள் காலகாலமாக ஏற்படுத்தியிருக்கிற மதப்பிரிவினையை தவிர்க்க இதுதான் ஒரே வழி.


2தீமோத்தேயு 2:15யை வாசியுங்கள் இங்கே தேவன் நீங்களும் நானும் என்னச் செய்யும்படியாக கட்டளையிடுகிறார்? நாம் தேவனுக்கு முன்பாக நம்மை உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்! பிரியமானவர்களே, தயவு செய்து கவனியுங்கள் இங்கே நாம் மனிதர்களுக்கு முன்பாக அல்ல தேவனுக்கு முன்பாக நம்மை உத்தமர்களாக நிறுத்தும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

நாம் தேவனுக்கு முன்பாக நம்மை எப்படி உத்தமர்களாக நிறுத்த முடியும்? நம்முடைய கிரியைகளினால் அப்படிச் செய்ய முடியும்! தேவன் இந்த வசனத்தில் எந்த வகையான கிரியையைப் பற்றிப் பேசுகிறார்? சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்து போதிக்க ஜாக்கிரதையுள்ளவர்களாய் வேலை செய்ய வேண்டும். தேவனுடைய சத்தியத்தை நிர்ணயிக்க வேத வாக்கியங்களை ஆழமாகவும், தொடர்ந்து படித்து மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

ஆனால், அவ்விதமான முயற்சியை எடுக்க நாம் தவறினால்? நாம் தேவனுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும் வெட்கப்படுத்தப் படுவோம்!

நாம் ஒவ்வொருவரும் அனுதினமும் புதிய ஏற்பாட்டை ஜாக்கிரதை யாய்ப்படித்து தேவனுடைய தூய்மையான சத்தியத்தை மாத்திரம் போதிக் கின்றேனா? என்று நிச்சயித்துக் கொள்ள வேண்டும். அதோடு கூட நாம் தேவனை ஆராதிக்கிற கிறிஸ்துவின் சபையில் சத்தியம் சரியான முறையில் போதிக்கப்படுகிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்! கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மாதம் சபை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய அநேக பாடங்களை படிப்போம்.

***Charlie Dipalma*** ***Benny Martin***



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | **Sunday<br>Thursday** | **6.45 - 7.00 a.m.** | **Box. 3815<br>New Delhi - 110049** | **Sunny David** |
| **TELUGU** | **Monday<br>to Friday** | **5.30 - 5.45** | **Box. 80<br>Kakinada - 533 001** | **Joshua<br>Gootam** |
| **TAMIL** | **Sunday<br>Thursday<br>Friday** | **6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m.** | **Box. 8405<br>Bangalore-560 084** | **P.R. Swamy** |
| **MALAYALAM** | **Friday** | **3.45 - 4.00 p.m.** | **Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034** | **P.K. Varghee** |

Please write to these address for Bible
Correspondence Courses,
Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month

**திருமறை ஆசான்** இதழ் ஆசிரியரின்
**திருமறை தியானம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் | TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**